REGISTER No. M. 120.

ઓં.

JNÂNA BODHINI

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

Vol. VII. No. 6—June 1904.

CONTENTS.

		PAGE.
1. GREATNESS OF LEARNING......	Editor....................	201
2. ORIGINAL ARTICLES:—		
1. Agastiyanar...............	K. C. D...........................	205
2. Four Deafmen...........	S. Anavaratvinayakam Pillai, M.A., L.T.	210
3. Chinnatambi.............	K. C. Duraisami.................	215
4. Kamban's Ramayanam.	Pundit Vencatarama Iyengar	219
5. Vedanta Desika..........	V. K. Rangachariar............	221
6. Antiquity of the Tamils.	V. Kanakasabhai Pillai, B.A., B.L.	226
3. UTTERANCES OF THE DAY:—..............................		227
On Technical and Agricultural Education—		
1. Rajah Peary Mohan Mukerji, C.I.E.		
2. Hon'ble L. A. Govindaragava Iyer, B.A., B.L.		
4. PERIODICAL LITERATURE:—..............................		230
1. Yathartha Baskaran—Srilasri Ambala Vana Pandarasawmi.		
5. DEPARTMENTAL NOTES & REVIEWS:—................		232
Agricultural, Commercial and Industrial—Medicine—Science—General.		
6. SPECIAL SUPPLEMENT		236
Vemanna's Pcems—Annie Besant on Education—C. K. Subba Rau on Elements.		
7. ACKNOWLEDGMENT OF BOOKS		237

Madras:

THE MADRAS LITERARY BUREAU,

8, UMPHERSON STREET, B. T.

1904.

Thompson & Co., Printers, Madras.

THE

Madras Literary Bureau.

OFFICE:
8, Umpherson Street, Black Town, Madras.

PATRONS:

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.
Divan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.
T. Vedadrisadasa Mudaliar, Esq.
(Retired High Court Judge of Travancore.)

Honorary Corresponding Members.

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.
G. Subramania Iyer, Esq., B.A.
J. M. Velu Pillai, Esq., F.M.U.
V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.
T. Balasundara Mudaliar, Esq.

SECRETARY:

K. C. Duraisami, Esq.

REPRESENTATIVES:

Throughout Tamil Districts.

ORGAN:

The 'Jnana Bodhini' (ஞானபோதினி).
(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to literature, Science, Philosophy and Religion).

The '*Madras Literary Bureau*' has the following separate Departments :

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying, and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers; passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novel, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of works into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

SOME PRESS NOTICES.

" Madras, misnamed the Benighted Province, has once again taken the lead in the establishment of an institution, which, supplying a great want in other parts of the civilised world, has singularly enough not been hitherto known in India. We welcome the attempt of our Madras compatriots to start a Literary Burneau in their midst. It is to consist of six separate departments, of which *the Translation and the Contribution Department and the General Agency may be useful even to people in other parts of the land.* We heartily wish the ' Bureau ' every success."—*The Citizen,* *(Allahabad)*, *23rd May 1904.*

ஞானபோதினி

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904-ம் ௵ ஜூன்௴ { சஞ்சிகை 6

GREATNESS OF LEARNING.

புலவர் மாட்சி.

கலவியின் இடையே ஒற்றுக் கொண்டால் அது கல்வியாகும். அதனைக் 'கசடறக் கற்கிற்' புலமை மேலிடும். புலமை மிக்கவரெல்லவரும் புலவோரே? புலவர் நாப்பண் இருந்து சிறிது பயிலுவதே யமையும். அது 'விண்ணுலகே யொக்கும் விழைவுற்று.'

2. புலவோர் 'உவப்பத்தலைப் பெய்வர்;' 'உள்ளப் பிரிவர்'. அதுவே அன்னோர் 'தொழில்.'

3. புலவோரே கற்றோராவர். ஆதலால் அன்னோர் மன்னவரைவிடச் சிறப்புடையர். 'மன்னருக்குத் தன்றேச மல்லாற் சிறப்பில்லை; 'கற்றோர்க்குச்சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.' இக்கருத்துப்பற்றியேயன்றோ திருவள்ளுவரும் கற்றோருக்கு 'யாதானு நாடாமால் ஊராமால்' என்றார்.

4. புலவரானவர் தத்தமக்குப் பற்றுக்கோடாக ஒவ்வொரு தாதாவைக் கட்டித் தழுவியவர்களாகவே இருப்பார்கள். இது பண்டையகாலத்திலிருந்து வரும் வழக்கம். மேலும் முன்காலத்து மன்னரனைவரும் புலவரைப் பாதுகாத்து வந்தமையே இதனை நன்கு

விளக்கிக் காட்டுகின்றது. பரிசில் இரந்து புலவர் மன்னரைச் சேருவதும், சேர்ந்தோர் மனஞ்சோராதிருக்கவே அரையன் பகைவர் நிலத்தை நோக்குவதும், வழக்கென்பது சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இடைக்காடனார் பாடியபாட்டால் நன்கு விளங்கா நிற்கின்றது. அப்பாடலாவது:—

"மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையும், உழவர்
படை மிளர்ந் திட்ட யாமையும், அறைநர்
கரும்பிற் கொண்ட தேனும், பெருதுறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்,
வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தமரும
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந!
மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை யிழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்னோக் கினரே.
நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்
கூற்று வெகுண்டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே."

5. புலவர் புரவலரை யடுத்து அவர்க்கிங்கிதமாய்ப்பாடுவர். புகழ்வர்; புகழாது புகழ்வர்; இகழ்ந்து புகழ்வர். இகழவும்செய்வர். வேந்தரோ 'செவிகைப்பச்சொற்பொறுக்கும் பண்புடையர்' ஆதலால்இன்னோரைக் கடுக்கார். அன்னோரைக் காணும் விருப்ப மேலீட்டாலே இருப்பர். இகழ்வதுபோற் புகழ்வதற்கோர் பாடல் வருமாறு:—

"பாரி பாரி என்றுபல வேத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்.
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே."

இதுவேள்பாரியைக் கபிலர் பாடிய பாட்டு.

6. பாடும் புலவர்க்கு நாடாளு மன்னர் பரிசில் அளிப்பதுவும் சாமானியமன்று. புலவர் தகுதியை யறிந்தே பரிசிலளிப்பர்மன். அதுபிற்குறித்த பாடலொன்றாற் சந்தேகமறத் தெரிகின்றது.

"ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்.

வரிசை யறிதலே யரியதே. பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே."

இது கபிலர் மலையமான் திருமுடிக் காரியைப் பாடியது.

7. பார்வேந்தரும் சொற்போர்வேந்தர் மாட்டுப் 'பொதுநோக் கொழிந்தவராகித் தம்மை யடைந்தாரது தகுதி குறித்து, 'யானை யுடனே தேரினை ஏறுதற்கும்' 'அமைப்பர்.' இதனை விளக்குஞ் செய் யுளாவது.—

"பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்,
அறனோ? மற்றிது விறண்மாண் குடிமி
இன்னா வாகப் பிறர் மண்கொண்
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே."

8. புலவர் 'பரிசில் குறித்துச் சேரல ! நின்னைச் சேரலம், காண் டல் வேண்டிய அளவே வந்தனம்.' எனக்கூறி மண்டில மாளும் மன்னரைக் கூடுவதுமுண்டு. ஆயை உறையூர் ஏணிச்சேரி முடமோசி யார் பாடிய பாட்டால் அதனை அறிகிறோம். எவ்வாறெனில்,

"புகழ்சால் சிறப்பினி னல்லிசை யுன்னி
வந்தனன் எந்தை! (நாம் வேண்டுவது)
'களிறு மன்றே மாவு மன்றே
ஒளிறுடைப் புரவிய தேரு மன்றே.
(மற்றென்னெனில்)
'நின்னைக்
காண்டல் வேண்டிய அளவை."

9. முற்காலத்து மன்னர் சபதங் கூறுழியும் புலவரை மறப்பா ரல்லர். தம்மாற் சன்மானிக்கப் பெறும் புலவராற் பாடல் பெறு வதே பெரும் பெருமை யென்பது அன்னோர் எண்ணம். தமது நிலவ ரையிற் 'புலவரை யிறந்தோர்' தங்கித் தாமதித்து வாழ்வதையே ஓர் பாக்கியமெனக் கொண்டிருந்தனர். இது யூகித்து எழுவ தன்று. இதன் உண்மையைப் பாண்டியன் தலையாலங் கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் பகை 'வேந்தரை யகப்படேனாயின்'

"என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்

குடிபழி தூற்றுங் கோலே னாகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை"

என்ற பாட்டானேர்க.

10. புரவலர்பாற் புலவரானோர்க்குச் சுதந்தரம் பலவுண்டு. "இன்னார் இன்னது தந்தார். நின்பால் யாம் கோரியதுவும் அதுவே. அதனைத்தருதல் வேண்டும்' எனக்கூசாது கூறுவர். அதற்குச் சான்றாவது:—

"முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாம லீந்த விறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்."

11. மன்னர் மாபெரும் புலவரைத்தமது பெண்மக்க ளானவர்க்குச் சீதன மளித்து அன்னோருடன் போக்குவது முண்டு. புகழேந்திப் புலவர் அவ்வாறு சோழனாடு சென்ற செய்தியை யறியாதார் யாவர்?

12. பொன்னை யுருக்க மாற்றுமிகும், கல்லை இழைக்க ஒளி வளரும், சாந்தை யரைக்க மணங்காணும். அது போலப் பாவலவரை வருத்தினால் அன்னோர் மேன்மை யதிகரிக்கும். சீதனமாகச் சென்ற புலவர் ஒட்டக்கூத்தனாரது அழுக்காற்றான் சிறைவாயகப் பட்டுக் குறைபா டடையாப் புகழேந்தி யாயினரன்றோ! 'சங்கு சுட்டாலும் வெண்மை தருமே.'

13. தாமடுத்து வாழ்ந்தோர் வானாடு வாழ்ந்தாரான காலத்துப் புலவர் இரத்தக்கண்ணீர் சிந்துவர். அதியமான் நெடுமானஞ்சி அவனது 'அரிய மார்பகத்தின் கண் தைத்த வேலால்' துஞ்சினனாகவும்

ஒளவையார் 'அவ்வேல் அறிவினை யுடையோர் நாவின் கண்ணே போய் வீழ்ந்தது.'

'இனிப்பாடு நருமில்லை, பாடுநர்க்
கொன்றீ குநருமில்லை' என்றனள்.

மேலும் அவளே அவன் போந்த பின்பு தனக்கு

'இல்லா கியரோ காலை மாலை,
இல்லா கியர்யான் வாழு நாளே'

எனப் பொன்றுவகையிற் பொரித்து வைத்தனரே.

14. முற்காலத்து மன்னர் இறந்துபட்டுக் கல்லாகியும் தொன்னட்புடையோரான' புலவர்'தம்முழைச்செல்லின் இடங்கொடுத்தளித்தது' வும் அதிசயமன்றே. இக்காலத்தவர்க்கு இது உறுதியே எனக்காட்ட வடக்கிருந்த பொத்தியார் எடுத்துக் காட்டும் பாட்டால் நன்கு விளங்கலாம். அது பாட்டாவது.—

"பலர்க்கு நிழலாகி யுலகமீக் கூறித்
தலைப்போ கன்மையிற் சிறுவழி மடங்கி
நிலைபெரு நடுகெ லாகியக் கண்ணு
மிடங்கொடுத் தளிப்ப மன்ற வுடம்போ
டின்னுயிர் விரும்புங் கிழமைத்
தொன்னட் புடையார் தம்முழைச் செலினே?"

இதனாற் சோழனும் 'கல்லாகியும் இடங்கொடுத்த கோப்பெருஞ் சோழன்' எனப்பெயர் பெற்றனன்.

15. புறங்காட்டுள் ஒரு புடையிலே தங்கி ஒள்ளிய தீச்சுட ஆயின் உடம்பு மாய்ந்து விட்டது. அதனால்,

"புல்லென் கண்ணீர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசியராகிப் பிறர்
நாடுபடு செலவினர் ஆயினர் இனியே"

என்னும் குட்டுவன் கீரனார் பாட்டால், காவலர் இல்லாத வழி பாவலர் பாடு இத்தகைத்து என்பது போதரும்.

பத்திராதிபர்.

AGASTIYANAR.

அகஸ்தியனார்.

இச்சஞ்சிகையில் அகத்தியனாரது பற்பல பெயர்களின் காரணங்களை மட்டும் சிறிது வித்தரித்து எழுதப்படும்.

அகஸ்தியன்:—(அகம் = மலை; ஸ்தியம் = அடக்கல்.) மலையைஅடக்கினவன் அதாவது விந்த மலையை அடக்கினவன் அகஸ்தியன்.

வரலாறு:—

மேருபருவதத்தின்தென்பாரிசத்தில்விந்தமென்னும் மலையானது இரவி சந்திரர் இயங்க நெறி கொடாதுபிரமபத மட்டும் உயர்ந்தமை யால் மேரு தாழ்ந்தது. தேவர்கள் முறையிட்டார்கள். அதற்கிரங் கிச் சிவபெருமான் தமக்குச் சமானராகிய குறுமுனியை அழைத்துத் தமிழ் இலக்கண முபதேசித்து மலயபர்வதத்திற்குச் சென்று வசிக் கக் கட்டளையிட்டனர். . கட்டளைப்படி வரும் முனிவரர் விந்த த்தையடைந்தனர். வழிவிடுக்கவேண்டினர். மலைஇகழ்ந்தது. உடனே கோபம் பொங்கியவராகிச் சத்திய லோகம் வரை தமது திருக்கரத் தை நீட்டி மலையின் தலையிலமுத்தினர். விந்தம் பிலத்திலழுந்தி அட ங்கியது.

மேற்கோள்:—

" விந்தஞ் சினந்து விதியூர் காறு நீள்வுற விசும்பூ
டருக்கன் முதலோர்
தந்தம் பொருந்து நெறியில்லாது மேருவிடை
சல்லாப மோடு மருவு
மந்தண் கடத்து முனிதன்னைப் புகழ்ந்திடலும்
மன்னனறிந் தருளியே
யுந்தும் பரன்றனை யினைந்தே தவம்புரிய
வுற்றானுயிர்க்கு ளுயிரான்."
" வீறமல் வெற்பினொடு தெற்கேக வெற்கு
வழிவிடுவா யெனப் புகறலு
மாறுகவிந்த மதிகழ்ந்தோத வேதபத மட்டுங்
கரத்தினை யெடா
பேறுதன் றலையழுத்தக் குலைந்தது பிலத்
தூடுபோகியது வெண்
ணீறுடி யன்பரொடு வம்பெய்தினர் விரய
நெறி வீழ்தல் காட்டு நெறிபோல்."

2. கடல் பருகி:—கடலைக் குடித்தவன்.

வரலாறு:—

தவப்பயனாகச் சிவபிரானிடத்திருந்து விருத்திராசுரன் சாகா வரம் பெற்றான். இந்திராதிகளுக்குச் சத்துருவாய் அவர்களை வதை த்தான். அவனையடக்குமாறு ததீசி முனிவரன் முதுகந் தண்டெ லும்பைக் கொணர்ந்து இந்திரன் வஜ்ராயுத மாக்கிக்கொண்டு அசுரன்

மேல் விடுத்தனன். அசுரன் கடலுள் ஒளித்தான். சுரர் குறுமுனியை அடுத்துக் குறையிரக்க முநிவரர் உடனே அக்கடலைக் கையாலள்ளிக் குடித்து விட்டனர். கடல் சுவறிற்று. விருத்திரன் வெளிப்பட்டான். இந்திரன் வஜ்ராயுதத்திற்கு இரையாயினன். (மே-ள்)

"கைதவன் கரந்து வைகுங் கடலைவெற் படக்குங் கையாற்
பெய்து பூந் தெல்லைத் தாக்கிப் பருகினன் பிறைசேர்சென்னி
ஐயன தருளைப் பெற்றூர்க் கதிசய மிதென்கொல் மூன்று
வையமும் தொழிலுஞ் செய்ய வல்லவ ரவரே யன்றே!"

கும்பசம்பவன்:—சிறு குடத்திற் பிறந்தவன்.

வரலாறு:—

மித்திர வருணர் பெய்த வீரிய கும்பத்தினின்றும் பிறந்தவன். இதனால் இவற்குக் கும்பயோனி, குடமுநி, கலசோற்பவனாதியநாமங்களும் உள.

4. மைத்திரா வருணி. மித்திரா வருணன் மகனாதலால் அப்பெயர் பெற்றான்.

வரலாறு:—வடிவிலும் அறிவிலுஞ் சிறந்தோராகிய மித்திரா வருணரென்னும் இருவரும் ஊர்வசியின் வடிவழகைக்கண்டு காமங் கொண்டு பின் தொடர்ந்தனர். அவள் இணங்கவில்லை. அவளைச் சபித்தனர். தமது வீரியத்தைக் கும்பத்திற்பெய்தனர். அக்கும்பத்தினின்றும் இவர் பிறந்தனர். (மே-ள்)

"மித்திரா வருண ரென்போர் விசும்புறை வார்க டம்மின்
உத்தம வடிவு மிக்கா ருருப்பசி யெழிலிற் காமன்
அத்திர மடர நொந்தே யவண்மறுத் திடலிற் காம
மொத்து வீரிய முன்வீழ வொருகுடத் தமைத்தாரன்றே."

"இருவர் வீரியமும் பெய்த வொருகுட மதனினின்று
சரியிலா நிமிசா பத்தாற் றவர்கணெண் வசிட்டன் றானும்
கரையிலா வுவரி தன்னைக் கரதலத் தமைத்தோன் றானும்
அருமுறை முநிவரேத்த வவதரித் தார்க ளன்றே"—பாகவதம்.

5. வாதாபி வில்வலாரி.:—வாதாபியையும் வில்வலனையுஞ் சம்மரித்தவன்.

வரலாறு:—ஏகசக்கிரத்தால் ஆயிரத்தெட் டண்டங்களையும் ஆண்ட சூரபதுமன் தங்கை அசமுகி என்பாள் தூர்வாச முநிவரைப் புல்லி யாண்மக்கள் இருவரைப் பயந்தாள். அவர்களில் மூத்தவன் வில்வலன், இளையவன் வாதாபி; இருவரும் பிரமதேவனை நோக்கி

அரிய தவமியற்றினர், சாகா வரம் பெற்றனர். பிறகு இளையான் தக ராகவும் மூத்தான் முனிவரனாகவும் மாய வேடம் பூண்டு வசிக்க, தம்மிடம் வந்தயதிதிகளை அதியுபசரணையோடு ஏற்று ஆட்டுக்கறிசமைத்திட்டு உண்பித்து, உண்டவுடனே வில்வலன் 'வாதாபி' எனக்கூவியதும் இளையவன் அதிதிவயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியேறுவான்; அதிதி உயிர் விடுப்பர். இவ்வாறு அதிதிகள் பற்பலரைத் தொலைத்தார்கள். அகத்தியர் மலையத்துச் செல்லும்போ தவரையும் இன்னோர் தங்கள் வழக்கப்படி உபசரித்து 'உணவுண்டு ஏகுக' என்றனர். முனிவரிணங்கினர். மாயமுனி ஆட்டைச் சமைத்தான். உணவளித்தான். குறுமுனி யுண்டார், வில்வலன் 'வாதாபி வருக' என்றான். குறுமுனி வயிற்றைத் தடவிக்கொடுத்துக்கொண்டு 'வாதாபிஜீரணோபவ 'என்றனர், வாதாபி ஜீரணமாயினன். கணக்கிலா அதிதிகளை அழித்த வாதாபியழியவே, வில்வலன் தனது நிஜரூப மெடுத்து அகத்தியரை அடர்த்தான். அருகிருந்த தருப்பையை எடுத்து பாசுபதாத்திரமாக விடுத்தனர். அவனும் படுத்தனன். இவ்வாறு இருவரையும் தொலைத்தவர் குறுமுனி. (மே-ள்)

"வாதா விலனெனும் பேர் படைத்து மிகுவஞ் சங்குயிற்று கொடியோர்
தீதான தற்றமுனி தன்னைத் தெரிந்துயிர் செகுப்போ மெனக் கருதியப்
போதாட தாயிளவ லுறவில்வ லன்முனிவர் போலப் பொலிந்தன னரோ."

"குன்றத்தை வென்ற முனிமுன்பாக வின்பான
கோலஞ் சமைந்த கொடியோன்
சென்றத்த வென்றடி பணிந்திற் கொணர்ந்தமுது
செய்தேக வேண்டு மெனவே
நன்றத் தொழிற் புரிவ மென மூழ்கி வந்தமுது
நயமோடு செய்து தகரைப்
பொன்றத் தடிந்து கறியாச் சிறப்பொடு
புரிந்தே படைத்தனனரோ.

"இன்பான வமுதங் கருந்தா விருந்தவ
னிருந்தா னிருந்த பொழுதே
வன்பாவி வாதாவி வருகென்ன முனிவன் றன்
வயிறூ டெழுந் திரையவே
கொன்பாவ கட்டிற் கரங்கொண்டு ரங்சொண்ட
கொண்டற் களத்த னடிகட்
கன்பான்ற வாதாபி கோதாவி யழிவுற்ற
தன்ன மொழிதே

"பின்னான தன்றம்பி மடிவான் செயல்கண்டு
பெரிதுஞ் சினந்து தருவன்
முன்னாக மதுகொண்டு முன்னாக வருபோதில்
முனியோர் தருப்பை யதனைக்
கொன்னாரு விடையாளி படையாக விடுபோது
கொடியோனு முடிவாகவே
மன்னாரிடந்தனை யகன்றே நெடுங்கட
லயின்று னடந்தருளினான்"—கந்தபுராணம்.

வயிறூரவுண்டவர்கள் அகஸ்தியராதிகளை நினைத்து வயிற்றை தடவிக் கொடுக்கில் பரிணமிக்குமென்பதற்கு மேற்கோளுண்டு. அதவது:—

"கும்பமுனி யைக்கும்ப கர்ணனைச் சம்பியனை
வெம்பு வடவனலை வீமனுடன்—சம்பிரமாய்
உண்டிவரை யுன்னி யுரைத்துதர மேற்றடவ
விண்டு * பரிணமிக்கு மே"

அகஸ்தியனார் மனைவியார்.

1. உலோபாமுத்திரை:—இப்பெயருக்கு ஒரு வடமொழிக்கிருந்த கருத்தர் கூறும் அருத்தங்களாவன:—தனது வடிவழகை மகளிர்க்கின்மையாக்கிய தன்றிப் பிரமசிருட்டியிலும் தன் வடிவழகைப் பிறர்க்குறாமல் முத்தரித்தவள். (2) தன் பதிக்குச் சந்தோஷந் தருவதில் லோபமில்லாதவள். (3) பதியின் விரக காலத்திலும் பதிக்குச் செய்யும் பணிவிடைகளில் லோப மில்லாதவள். இவள் சதர்மிணி எனவும் பெயர் பெறுவாள். அதாவது பதியின் அறத்துவழி நிற்பவளாம். இப்பெண்மணியால் அகத்தியர்க்கும் அவர் சீடரான தொல்காப்பியர்க்கும் மனத்தாபம் நேர்ந்தது. அகத்தியம் பின்னவராற் சாபம் பெற்றது.

[காலஞ்சென்ற என் தந்தையாரவர்களால் இவை எழுதப்பட்டவை]

K. C. D.

லலிதாஸஹஸ்ர நாமம்:—இது வடமொழியினின்றும் தென்மொழிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ பாஸ்கரராயர் மாபாடியத்தை ஒட்டியே அச்சாகின்றது. ஞானபோதினி சந்தாதாரர்களுக்கு ரூ 1-8-0. முந்தியே பெயர்ப்பதிவு செய்து கொள்ளுதல் அவசியம். சென்னை மதராஸ் விடாரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

---

* பரிணமித்தல்=சீரணித்தல்.

FOUR DEAF MEN.

நான்கு செவிடர்.

முன்னொரு காலத்து ஒரு செவிட்டிடையன் தன் கிராமத்திற் கணித்தாகத் தன் ஆட்டு மந்தைகளை யோட்டி மேய்ப்பது வழக்கமாயிருந்தது. ஒரு நாள் உச்சிக் காலங்கழிந்து சூரியன் மேற்கடலை யெட்டிப்பார்க்குந் தருணமாகியும் அவன் பெண்டாட்டி சாப்பாடு கொண்டுவரவில்லை. சாப்பாட்டைக் கொண்டுவர தானே வீட்டுக்குப் போகலா மென்றாலோ, மந்தைக்கேதாவது ஆபத்து நேரிடுமே யென்ற பயம் அவன் மனதிலுறுத்தியது. இன்னுங் கொஞ்சநேரம் பொறுத்துப் பார்த்தான். பசியோ ஸஹிக்க முடியவில்லை. கடைசியாக ஒருவிதமாகத் துணிந்தான். தற்செயலாய்ப் பக்கத்திலுள்ள சிற்றாற்றங்கரையில் தன் பசுவிற்காகப் புல்லரிந்துகொண்டிருந்த கிராமங் காவல் தலையாரி யிவன் கண்ணிற் பட்டான். உடனே இடையன் அவனிடத்திற் பாதிமனதோடு போனான். ஏனென்றால் இந்தத் தலையாரி வகுப்பைச் சேர்ந்தோர் ஜனசொத்துக்களைப் பந்தோபஸ்துப் பண்ணுதற்காக நியமிக்கப்பட்டிருந்தாலும் பெரிய திருடர்களாயிருப்பது எல்லாரும் அறிந்த விஷயம். இடையனுக்கோ வேறே போக்கில்லை. தலையாரி யிடத்துச்சென்று "அப்பா! நான் கொஞ்சக் காலம் வெளியே போய்வரவேண்டி யிருக்கிறது. போஜன முடித்துத் திரும்பவந்ததும் உனது சிரமத்திற்குத் தக்கவாறு பரிசளிப்பேன்" என்றான். தலையாரியோ இடையனத்தனை செவிடன். அவன் சொல்லியதி லோரக்ஷரமும் அவனுக்குப் புரியாதபடியால் கோபத்தோடு, "என்ன ஐயா, எவ்வளவு சிரமப்பட்டு நான் இந்தப் புல்லை அரிந்து வைத்திருக்கிறேன். உனக்கு இதிலென்ன பாத்தியதை. உன் ஆடுகள் மட்டும் கொழுத்துத் திரியவேண்டும், என் பசு பட்டினி கிடக்கவேண்டுமோ? உன் வேலையைப்பார்த்துக் கொண்டு போய்வா" என்று சொல்லி முடித்துத் தன் கையால் ஒருவித ஸமிக்ஞைசெய்தான். தன்வேண்டுகோளுக்குத்தலையாரியிணங்கினனென்று இடையன் அர்த்தம் பண்ணிக்கொண்டு தன்னூரை நோக்கி யோடினன். போம்பொழுது தன் மனைவி யிதுவரை வராததற்காக அவளை நன்றாகத் திட்டி யுதைக்க வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு

போனன். அவன் வீடுபோய்ச் சேர்ந்த சமயம் அவள் பச்சைப் பயற்றை நிறையத்தின்று அதனாலுண்டாகிய தாங்க முடியாத வயிற்று வலியால் வாசற்படியண்டை கிடந்து உருண்டுகொண்டிருந்தாள்.

அவள் படும் கஷ்டத்தைப்பார்த்ததும் இடையன் கோபம் பறந்து விட்டது. ஆனால் அவளைச் சௌக்யப்படுத்தித் தனக்குஞ் சாப்பாட்டைத் தயார் பண்ணுவதாயிருந்தால் நேரம் நிரம்பப் பிடிக்குமே யென்று ஆலோசனை பண்ணினன். தலையாரியை எவ்வளவு நேரத்திற்குத் தான் நம்பலாம்? தன் வேலைகளை முடித்துக்கொண்டு மந்தைக்குத் திரும்பவந்து சேர்ந்தான். ஆடுகளோ இடையன் விட்டுப்போனவிடத்தை விட்டுப் பெயராமல் மேய்ந்துகொண்டிருந்தன. இவன் வந்தவுடனே முதலில் ஆடுகளை எண்ணிப் பார்த்தான். ஒன்று கூடக் குறையாமலிருக்கவே யிவன் கொண்ட ஆனந்தத்திற் களவில்லை. "இந்தத் தலையாரி யோக்கியன்தான்! அவன் இனத்துள் மாணிக்கமென்று சொல்லத்தகும். நான் அவனுக்குப் பரிசு கொடுப்பதாகச் சொன்னேனல்லவா? நல்லது அவனுக்கொரு பரிசளிப்பேன்" என்று வியப்போடு தானே சொல்லிக்கொண்டான்.

அந்த ஸந்தர்ப்பத்தில் அவன் மனப் போக்கிற் கேற்ப மந்தையில் ஒரு நொண்டியாடு இருந்தது. ஆனாலும் அதனிடத்து வேறொரு குறையுமில்லை. அதைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு தலையாரி யண்டைபோய் "நான் இல்லாத பொழுது இவ்வளவு அக்கறையோடு என் மந்தையைப் பாதுகாப்பாய் என்று சொப்பனத்திலும் நான் நினைக்கவில்லை. இதோ, உன் சிரமத்திற்காக ஒரு ஆடு பரிசாகத் தருகின்றேன். மனமுவந்து ஒப்புக்கொள்" என்றான். தலையாரிக்கோ நொண்டியாடு அங்கே கிடந்ததுதான் கண்ணில் பட்டது; அவனுக்கு அடங்காக்கோபம் வந்ததனால் "என்னப்பா! ஒன்றுந் தெரியவில்லை. இருந்தாற்போ லிருந்து திடீரென்று உன் ஆட்டின்காலை யொடித்தேனென்று சொல்லுகிறாய்? இது வென்ன? நான் இப்பொழுதிருக்கிற விடத்தைவிட்டு நகரவேயில்லை யென்று எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் சத்தியம்பண்ணுவேன். உன் மந்தையின் கிட்டப்போனவன் யாரடா?" எனப் படபடவென்று சொன்னான்.

இடையனே "ஆமாம் ஐயா, அது கொழுத்து லக்ஷணமாயிருக்கிறது. நீ அதைக்கொண்டு குடும்பத்தார்க்கும் ஸ்நேஹிதர்களுக்கும்

ஒரு நல்ல விருந்து செய்யலாம்'' என்று சொல்லிக்கொண்டே ஆட்டை யவன் சமீபத்துக் கொண்டுபோனான்.

தலையாரிக்குக் கோபம் அதிகப்பட்டது. "சீ! மடையா! உன் ஆட்டண்டை நான் போகவில்லையென்று சொன்னது உன் காதிற் படவில்லையா? இன்னமுமா நான் உன் ஆட்டின் காலை முறித்ததாகச் சொல்லுகிறாய்? இந்த இடத்தை விட்டு ஓடினையாகிற் பிழைத்தாய் நின்றாயானால் நன்றாக உதைப்பேன்'' என்று சொல்லித் தான் காட்டிய ஸமிக்ஞைகளாலும் தன்னுடைய தீர்மானத்தை அவனுக்குத் தெரிவித்தான்.

தலையாரிக்குக் கோபம் மேலுமேலும் அதிகரிப்பதைக் கண்டு இடையனுக்கு ஒன்றுந்தோன்றவில்லை, கோபமோ நியாயத்தப்பான தென்று அவனுக்குப் பட்டது. ஆனாலும் உதை படுகிறதா என்று ஆலோசித்து அவனோடு சண்டை போடுதற்குத் தயாராயிருக்கும்படி மடியை யிறுக்கிக் கட்டினான். இரண்டுபேரும் ஒருவரை யொருவர் அடிக்கத் தொடங்குகிற சமயத்தில், குதிரை மேலேறி யொருவன் அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்தான். இவர்களிருவரும் கூக்குர விட்டு அவனை நிறுத்தினார்கள். இடையன் குதிரை லகானைப் பிடித்துக்கொண்டு "ஐயா, ஒரு நிமிஷம் நான் சொல்லுவதைக் கேட்டு என்பேரில் ஏதாவது குற்றமுண்டாவென்று சொல்ல வேண்டும். இந்த மனுஷன் ஒரு சிறு உபகாரம் எனக்குச் செய்ததி னிமித்தம் இவனுக்கு இந்த ஆட்டை வெகுமதியாகக் கொடுக்க அபேக்ஷிக்கிறேன். இவன் என்மேல் சீற்றங்கொண்டு உதைக்க எத்தனிக்கிறான்'' என்றான்.

தலையாரி தன் முறைக்குப் பேசவிரும்பி "இந்த இடைக்கழுதை அதன் ஆட்டின்காலை நான் முறித்தேனென்று துணிந்து சொல்லுகிறது. நான் அந்த மந்தையின் கிட்டப்போகவே யில்லை'' என்றான்.

இவ்வாதிகளிருவர் வாதத்தையுங் கேட்ட குதிரைவீரனோ இவர்கள் செவிகளைநற்செவிகளாக்கும் செவிக்குணமேன்மையுடையவன். வாதமொழிகளில் ஒரு அக்ஷரங்கூடப் புரியாமல் "நீங்கள் சொல்லுவது வாஸ்தவமே; இந்தக் குதிரை எனக்குச் சொந்தமென்று நான் சொல்லவில்லையே. சாலைப்பக்கம் அது மேய்ந்துகொண்டிருந்தது. எனக்கோ அவஸரம். சீக்கிரமாகப் போய்ச் சேரலாமென்று கருதி

நான் இதன்மீதேறினேன்; அது உங்களுக்குச் சொந்தமாயிருந்தால் தாராளமா யெடுத்துக் கொள்ளுங்கள், நான் போகவேண்டுமே. என க்குக் காலதாமதம் ஆகிறது. என்னை விட்டு விடுங்கள்" என்று தீர் மானஞ் சொன்னான்.

தன் தன் எதிரி பக்கமே குதிரைவீரன் தீர்ப்புச் சொன்னனெ ன்று இடையன் தலையாரி யிரண்டுபேருக்குந் தோன்றவே பொறுமை யதிகதிரித்துக் குதிரைவீரன் ஓரஞ்சொன்னரென்று அவனை வாய் க்கு வந்தபடி திட்ட ஆரம்பித்தனர்.

இந்த ஸமயத்தில் ஒரு வயது சென்ற பிராமணன் அந்த வழி யாக வந்தான். தங்கள் வழக்குத் தீர்த்தற்கு அவன் குதிரை வீரனை விடத் தக்க மனுஷனாகத்தோன்றின படியால் இரண்டு பேரும் அவ னைத் தடுத்துத் தாங்கள் சொல்லுவதைக் கொஞ்சங் கேட்கும்படி வேண்டினர். இடையன் தலையாரி குதிரைவீரன் மூவரும் ஏகோபித் துப்பேச ஆரம்பித்து ஒவ்வொருவனும் தன் கதையை விஸ்தார மாய்ச் சொல்லி வாதவிஷயத்தைத் தெளிவாக விளக்கித் தங்களுள் யார் குற்றவாளி யென்பதைத் தீர்மானித்துச்சொல்லுமாறு வேண்டி னர்.

அம்மூவரை போலவேப் பிராமணனும் ஒரு செவிடன்; அவன் எல்லாவற்றையுங் கேட்பது போலிருந்து கடைசியாக "நல்லது! நல்லது! நீங்கள் சொல்லுவது எல்லாம் அர்த்தமாயிற்று. என்னைப் போகவேண்டாமென்று சொல்லுவதற்காக என் பெண்டாட்டி உங்க ளைத் திரட்டியனுப்பியிருக்கிறாள். நீங்கள் சொன்னால் நான் வீட்டுக் குத் திரும்பி விடுவேனென்று அவள்உத்தேசித்தாளாக்கும்; அதெல் லாமில்லை, நான் பிடித்தால் ஒரே பிடிதான். உங்கள் ஜோலியைப் பார்த் துக்கொண்டு நீங்கள் போகலாம். என் பெண்டாட்டி எப்படிப்பட்ட வளென்று உங்கட்குத் தெரியுமோ? அவள் கெட்ட பஜாரி. அப்ப டிப்பட்ட பேமானியோடு ஒருக்ஷணம் குடித்தனம் பண்ண இனிமேல் எனக்கு முடியுமா? அவளைக்கொண்ட நாள் முதல் அவளால் நான் செய்த பாபங்களை நினைத்துப்பார்த்தால் இன்னும் நூறுஜன்மம் எடுத்தாலும் அவற்றைத் தொலைக்க முடியுமா? அதை யுத்தேசித்து தான் நான் காசியாத்திரை போகிறேன். அந்த புண்ணிய க்ஷேத்தி ரத்தை யடைந்து கங்காதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அவள் துஷ்

டத்தனத்தால் நான் செய்த பாபங்களைத் தொலைத்துவிட்டு வரவேண்டும். இனிமேல் பரதேசஞ் சென்று யாசகஞ் செய்து காலத்தைத் தள்ளவேண்டுமே யல்லாது அவளோடு இருக்கமுடியாது." என்று தன் தீர்மானத்தைச் சொன்னான்.

இங்ஙனம் இருவரும் இப்பிரகாரமாக ஒருவன் சொல்லுவது மற்றவனுக்குப் புரியாமலே குடல்வெடிக்கக் கதறிக்கொண்டிருந்ததருணத்தில் குதிரைவீரன் கொஞ்சதூரத்தில் சிலமனுஷர் திரண்டு வேகமாய் வருவதைக்கண்டான். ஒருவேளை யவர்கள் குதிரைக்குச் சொந்தக்காரராயிருக்கக் கூடுமென்று பயந்து குதிரையினின்று மிறங்கி யோட்டம் பிடித்தான்.

இடையன் திடீரென்று பொழுதாகிறதைப் பார்த்து மந்தையைக் காப்பதற்காக விரைந்து சென்றான். அதற்குள்ளாக ஆடுகள் வெகுதூரம் போய்விட்டன. வழக்குத் தீர்க்க வந்தவர்களை வைது கொண்டு இந்தப் பூமியில் நியாயமென்பதே கிடையாதென்னும் உறுதியோடு அவன் தன் காரியத்தை நாடினான். கடைசியாக, "ஒருவரைச் சொல்லுவதிலும் குணமில்லை; இன்று காலை வரும் வழியில் ஒரு பாம்பு குறுக்கே போயிற்று அதனல்லவா இந்த துக்கமெல்லாம்." என்று தனக்கொரு சமாதானமும் தேடிக்கொண்டான்.

தலையாரி தன் புல்லுக்கட்டிற்கு என்னகதி வந்ததோவென்று பார்க்கத் திரும்பியோடி அங்கே கிடந்த நொண்டியாட்டை யெடுத்துத் தோள்மீது போட்டுக்கொண்டு வீட்டை நோக்கிப் போனான். வம்புச் சண்டைக் கிழுத்து வாதிட்ட இடையனை யப்படித்தான் தண்டிக்க வேண்டுமென்பது தலையாரி யபிப்பிராயம்.

கிழப்பிராமணனோ தன் வழியை நோக்கிச்சென்று இராத் தங்கலாமென்ற உத்தேசத்தோடு பக்கத்தூர்ச் சத்திரத்தை யணுகினான். பேசாது இராமுழுதுந் தூங்கவே பெண்டாட்டிமே லிருந்த கோபமெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்டது. விடியற்காலமானதும் இவன் பந்துக்களும் ஸ்நேஹிதர்களும் இவனைத் தேடி யங்குவந்தார்கள். இனிமேல் பெண்டாட்டி சரியாய் அடங்கி நடப்பாளென்று அவர்களெல்லாம் சேர்ந்து சொன்னதின்பேரில் பிராமணனுக்கும் கோபம் மாறிற்று. அவர்களோடு தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

S. அநவரத விநாயகம்பிள்ளை.

சின்னத்தம்பி.

அதிகாரம் 8.

பாரபத்தியக்காரர் குடும்பம்.

மேற்கடல் குளித்து அருணன் ஒளித்ததும் உலகெலாமிருண்டது. கவுண்டன் வாழ் தெருவிற்கும் மேற் புறத்து வீதியில் ஒரு பெரிய புராதன வீடு உண்டு. அதன் கூரை ஓர் பாகம் ஓட்டுவில்லை. மற்றொரு பாகம் ஓலைமேய்ந்தது. இவ்வீட்டிற்குச் சுற்றிலும் கோட்டைபோன்ற மதில்நாற்புறமும் எழுப்பியிருக்கிறார்கள். இதில் ஆங்காங்கு ஏவலாளர் தங்குமிடமும், வாம்பரிகள் கட்டுமிடமும், காளைகள் பூட்டும் கொட்டகையும், பண்டில் நிறுத்திய இடமும், மாட்டுக் கட்டுத்துறையும், நிருமிக்கப்பட்டிருக்கின்றன. வீட்டின் முகப்பின் ஒரு பெரிய களம், ஆயிரம் பேர் வீற்றிருக்கச் சாணிமெழுக்கிட்டிருக்கின்றது. இவ்வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் அனேககுடிகள் வருவார்கள். கவுண்டனும் பாரபத்தியக்காரருந்தான் இப்பக்கத்திற் பெருத்த பதவியுடையவர்கள். சொற் சோர்வு படாதவர்கள். நன் நம்பிக்கையும் செல்வாக்குமுடையவர்கள். இவ்வீட்டார்க்குப் பாரபத்தியக்காரர் என்னும் பெயர். இவர்கள் மைசூர் கருத்தர் ஆக்கினையால் ஊரில் நடக்கும் கொள்ளை கொலையாதியவைகளை விசாரித்து நீதி செலுத்துகிறவர்கள். ஆதலால் இவ்வீட்டார்களிடத்தில் அக்கம் பக்கத்து மூன்று நான்கு ஊரார்களுக்குப் பயபக்தி விசுவாசம் உண்டு. இவர்களுக்கு உள்ள அதிகாரத்திற்கோர் வரம்பில்லை. குற்றவாளிகளைப்பிடித்து இம்சை புரிவார்கள். கிட்டிபோடுவார்கள். சித்திரவதை செய்வார்கள். நகக்கண்களிற் பந்தம் கொளுத்துவார்கள். முட்பீப்பாய்களுள் இட்டு உருட்டுவார்கள். மரங்களில் தலைகீழாய்க் கட்டித் தொங்க விடுவார்கள். கையைக் கணுக்கட்டில் கொதித்த நெய்யில் துவைத்தெடுத்து முடக்குவார்கள். சூடு போடுவார்கள், மாடுகளையும் கன்றுகளையும் காளைகளையும் கொண்டு முட்டவைப்பார்கள். கண்ணிக்கோல் இரண்டினுள் மனிதர் வயிற்றைச் சிக்க வைத்து நசுக்குவார்கள். குட்டை போடுவார்கள். இன்னன கொடுமைபனந்தம் பண்ணுவதைத்தான் அவர்கள் அழகாகப் பெற்ற

அதிகாரம் என்று பலர் உயர்த்திப் பேசுவார்கள்! இவ்வளவு தானு? அவரவர்களுக்குத் தோன்றிய வண்ணமெல்லாம் செய்வது சிக்ஷை யெனப் பெயர் பெறும். இவ்வமிசத்தார்களில் ஒருவர் ஒரே நாளில் இருபத்தைந்து பெயர்களை முள்ளிடையில் தூக்கிப்போட்டு மூன்று நாட்கழித்து எடுத்து விட்ட பெருமை கொண்டனர். அரசர் அதிகாரம் பெற்றமையால் பாரபத்தியக்கார் என்னும் பட்டம் அடைந்த இவ்வீட்டின் தலைவராக இக்காலத்தில் சிதம்பரம் பிள்ளை வாழ்கின்றார்.

இவரதிகாரத்தை ஊரார் மெச்சுவார்கள். இவர் முற்காலத்திய கொடுமைகளைப்போக்கி ஊரில் குறும்படக்கி வாழும் தன்மை கொண்டவர். கொடுமை புரிவதில்லை. தன்னுயிர் போலவே மன்னுயிரையும் பாவிப்பவர். இவ்வெண்ணம் ஊரார்களுக்குள் சந்தோஷ மூட்டியது. நம்பிக்கையைவிளைத்தது. ஊரார்களைச் சண்டை சச்சரவில்லாமல் வாழச் சமாதானப்படுத்துவார். கக்ஷிகளைப் போக்கி ஊராரை ஏகோபித்து வாழக்கூறுவார். குடிகளுடன் அதிக சரசமாக நெருங்குவார். இவர் வளர்ந்துயர்ந்தவர். தடித்த தேகம் படைத்தவர். கறுத்த மேனியர். இவர் கண்ணிரண்டும் பரந்த மான் கண்களுக் கிணையானவை. விபூதிப் பூச்சிட்டு அகன்ற சந்தனத்திலகம் நெற்றியில் துலங்கவைப்பவர். இனிமையான பேச்சுடையவர். நன்னடக்கைப் பிரதாபர். இவர் மனைவியும் உத்தமகுண சீலி. கணவர் ''சொற்றிறம்பாமல்'' கற்பைக்காத்து வருபவள். சிவகாமி என்னும் பெயரினள். இவர்கள் பண்ணரிய தவப்பயனுய் ஒரே புத்திரி தோன்றியுள்ளாள். அவள் நலமேயுருவாய் அமைந்தவள். காரிருண்ட கூந்தல்-வான்மதி புரையா வொண்முகம்-கமுகடுத்த களம்-கும்பஸ்தனம்-சிறுத்தவிடை-மரை மதித்த அடிகொண்டு சிலம்பு கொஞ்ச நடந்து, தேனும்பாகும் சீனியும் விரவியமொழியுடையவளாய் வானுல கொளிரும் மங்கையர் அதிவனப்பை யெல்லாம் வடித்துச்சதுமுகத்தான் திரட்டிவிட்டனைய உருவத்தினள். சின்னப்பிள்ளை யென்னும் பெயரினள். இம்மூவர் வாழ்க்கையால் புராதன வீடு மேம்பாடடைந்து விளங்குகின்றது.

கவுண்டன் வீட்டிலிருந்து திரும்பி வந்த சிதம்பரம் பிள்ளை இராப்போசன முடித்தானபின், தன் மனைவியாரைக் கூவி " அடீ

கவுண்டன் வீட்டுக்கு வந்திருந்த சிறுவர் சைவராம், தெக்கணத் தாராம், நாம் வந்த புதுக்கோட்டைக் கடுத்தவராம். அது உனக்குத் தெரியுமா?" என்றதைக் கேட்ட

மனைவியார் "அது எனக்குத்தெரியாது, ஆனால் அவர் நடையில் சைவரென்று மதித்தேன். மேலும் நீங்கள் சிவபூசை செய்யும் போது பாடும் தேவாரத் திருவாசகப்பாடல்களை அவர் பாடுகிறதை ஒரு நாள் கேட்டேன். அவர் பெரியபுராணம், திருவிளையாடல் படிக்கிறார். நான் பார்த்தேன்." என மொழிந்தாள்.

இதற்குப் பாரபத்தியக்காரர் "அச்சிறுவர் கொழுத்தசைவராம். தக்க மனுஷன்பிள்ளையாம். சுற்றத்தார்கள் கொடுமையைச்சகியாது சைவக் கொழுந்துகள் வாழும் கொத்தமங்கலத்தை விட்டு ஓடிவந்திருக்கிறார். அவர் ஆலமுடையார் கோத்திரத்தாரெனக் கவுண்டர் சொல்லுகிறார்." என்றதைக் கேட்ட

பத்தினியார் "அடே, ஆண்டவனே ! ஆலமுடையார் கோத்திரத்தார்களுக்கும் நமக்கும் சம்பந்த முண்டல்லவா. அவர் எங்கே ? ஊரில் இல்லையாமே. அடுத்துக் குரு பூசை வருகிறதே. அழைத்து வாருங்கள்" என்றாள்.

"இப்பொழுது அவர் தமது ஊர் போயிருக்கிறார். அங்கே அவர் அத்தையம்மாள் வாழ்வதாய் அறிகிறேன். அவளையழைத்து வருவார். வந்ததும் நமது மனைக்கு வருந்திக் கொணர்ந்து விருந்திட்டு உபசரிக்கவேண்டியது. இச்செய்தியைக் கவுண்டருக்கும் அறிக்கையிட்டேன். அவரை நாம் மருதகிரி போனபோது அடிவாரச் சோலையில் கண்டோம். அங்கும் அவரிடம் அளவளாவிப் பேசவில்லை. அவரும் தனித் திருந்தார். நமது சிருங்காரச் சின்னப்பிள்ளை அவரை உற்று நோக்கினாள். அவரும் பார்த்தார். கடைக்கண் பார்வையாலன்றோ உலகம் நிலை பெறுவது" என்ற உரையைக் கேட்டதும்

சிவகாமி மனங்கொதித்து "என்ன? அப்படிச் சொல்லுகிறீர். அவள் எதுக்குப் பார்த்தாள்? அதனால் என்ன பிறந்தது ? அவள் ஒன்றும் அறியாப்பேதையல்லவா, இதென்ன பேச்சு நீங்கள் பேசுகிறீர்கள்? அந்தமில்லாத பேச்சாயிருக்கிறது. உங்கள் பேச்சோ நீங்களோ வெந்தாப் போலிருக்கிறது! அது கிடக்கட்டும், வந்த

தும் அழைத்து வந்து உபசரிக்கலாம். கூடப்பெரியவளும் வருகிற தாய்ச் சொல்லுகிறீர்கள். அதிக நல்லது. அவளால் சகலமும் அறியலாம். அம்மையைப்பார்த்தாலே போதும். விளங்கிவிடும்'' என்ருள். மாதர்க்கு ஊடலுங் கூடலும் பர்த்தாக்களிடம் தானே! ஊடியவள் உடனே சாந்தம் மேலிட்டு மிருது பாஷியம் செய்தனள். இதற்குள் சின்னப்பிள்ளை வந்தனள்.

வந்தவள்—"அம்மா! வா படுத்துக் கொள்ளலாம். பொழுது போச்சுதே. அடுத்த வீட்டிலே நல்லதங்காள்கதை படித்தார்கள். கேட்டுக் கொண்டிருந்தேன். கலியாணச் சீதனத்திற்காக என்னென்ன கொடுத்ததாய் எழுதி இருக்கிறது! இத்தனையும் பெண்ணுக்காக வேருெருத்தனுக்கு என் அப்பன் பெற்றவன் கொடுக்கிறான்? அதனல் தகப்பனுக்கு என்னலாபம்?'' என்ருள்.

இதைக் கேட்டதாய் உள்ளுக்குள்ளே நகைத்துப் "பேதாய்! இதென்ன உன் அறிவு? உலக்கைக் கொழுந்தும் குந்தாணி வேருமாய் இருக்கிறது. உனக்கும் கலியாணமானல் நாங்களும் கூடியது கொடுப்போம். நீயும் பெறுவாய். உன் கையை மற்ருெருவனுக்குப் பிடித்து விட்ட நாங்கள் நீ போனதும் சுகமே கவலையற்று வாழ்வோமே? ஏற்ற சாதகங்கள் செய்யாமல் மறப்போமா?'' என்றனள். இதற்குத் தந்தையார் பதில் கூருது இருவர்களையும் படுக்கைக்குப் போகக் கட்டளையிட்டருளினர். எல்லோரும் படுத்தார்கள். கும்பகர்னப்படலம் வாசித்தார்கள்.

K. C. துரைசாமி.

ஹானரபில் ஜஸ்டிஸ்

C. சங்கரன் நாயர் அவர்கள். B. A, B. L.

மிஸ்டர் C. சங்கரன் நாயரவர்கள் சென்னையின் நீதிஸ்தலத்துநியாயாதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருப்பது நமது நாட்டிற்கேபெருமை,

உ.

ஸ்ரீமத் கம்பராமாயண

அருங்கவி விளக்கம்.

முதலாவது பாலகாண்டம்.

ஆஞ்சநேயன் துதி.

அஞ்சிலே யொன்று பெற்ற னஞ்சிலே யொன்றைத்தாவி
அஞ்சிலே யொன்றாறாக வாரியர்க் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தா னவனெம்மை யளித்துக் காப்பான்.

கருத்து:—இராமனுக்காக ஆகாய வழியாகச்சென்று கடலைத் தாவிப் பூமியிற்றோன்றிய சீதாதேவியைக் கண்டு பிறகு இலங்கையிற்றீயை வைத்த வாயுவின் புதல்வன் எம்மைக்கிருபைகூர்ந்து காப்பான் என்பதாம்.

இப்பாடல் அருங்கவி விளக்கத்திற்கு முன் துதிகவியாகக் கொள்ளப்பட்டது.

சிறப்புப்பாயிரம். 3-ம் கவி.

ஆதி யந்த மரீயென யாவையு
மோதி னாரல கில்லன வுள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்.

சொல்முறை.—அலகு இல்லன உள்ளன வேதம் என்பனயாவையும் ஆதி அந்த அரீ என ஓதினார் பற்று இலார் மெய்நெறி நன்மையன் பாதம் அல்லது பற்று இலர்.

கருத்து:—அளவுக் கடங்காமல் (பலவாய்) விளங்குகின்ற எல்லா வேதங்களையும் ஆதியில் அரீ என்றும் அந்தத்தில் அரீ யென்றும் ஓதிப்பொருளுணர்ந்தவர்கள் இருபற்றில்லாதவர்கள். பலர்க்கும் நன்மை செய்து அவர்களைக் காத்தலையே தமக்குச் சத்திய நெறியாகக் கொண்ட (காக்குங்கடவுளது) பாதமல்லது வேறொன்றை அவர்

கள் பற்றமாட்டார்கள். நன்மையன் என்றதால் காக்கும் கடவுள் என்றது பெறப்பட்டது. பற்றிலார் என்றதனனே ஓதுதல் பாராயண மட்டில் நில்லாது பொருளுணர்தலளவாய் நின்றது. அரீ என்றதை ஈரிடத்தும் சேர்த்து எனவென்பதோடு கூட்டிக்கொள்க.

பாடபேதம்:—ஆதியந்தம் அரீ இயனவேறோர் பாடமும் நடைபெறுகின்றது. அதன் பொருள் ஆதியிலும் அந்தத்திலும் விளங் உலககாரணனும் அரியை ஒத்து (நித்தியமாய்) விளங்கும் வேதமென்பன யாவையும் ஓதினர் மெய்நெறி நன்மையன் பாதமல்லது பிறிதொன்றனையும் பற்றார் என்பதாம். மெய்நெறி நன்மையன் கருணை குடிகொண்டாக்கும் கடவுள். என்ன எனற்பாலது செய்யுளாதலின் என நின்றது தொகுத்தல் விகாரம்.

விசேடம்:—வேதமேன்பன மேய்நேறி நன்மையன் வேதமார்க்கம் ஆகமமார்க்கம் என்பன விரண்டினுள் தலைமையது வேதமார்க்க மாதலின் இவ்வாறு காட்டப்பட்டது. வேதபாஷியம் செய்த வித்தியாரணியரும் தாம் செய்த இராமாயண இரகசிய மெனும் நூலில், பாலகாண்ட முதலிய காண்டங்கள் காயத்திரி பீஜாக்ஷரங்களடங்கியனவாய் வைதிகப் பொருள் மலிந்திருப்பதினல் உலக காரணனும் இராமன் குணங்கள் கூறப்பட்டுள்ள வான்மீகி இராமாயணமாம் இதிகாசம் வேத நூல் போல் தலைமை பெற்றதென்று கூறியுள்ளார். மந்திரங்களுள் காயத்திரியினும் சிறந்த மந்திரமில்லை யென்பதும் தாயைக் காட்டிலும் பரமான தெய்வமில்லை யென்பதும் நமது நாட்டு வழக்கு. வேத மோதுங்கால் ஆதியிலும் அந்தத்திலும் "அரிஓம்" என்று உச்சரிப்பது முறையாம் பொழுது அரியெனும் சொல்லை மட்டும் கூறிய தென்னையோ வெனில் கூறுதும். அப்படி முன்னுகப் பின்னுக உச்சாரணம் தொடங்கும்போதும் முடிக்கும் போதும் முன்னுதிக்கும் முதன் மொழி அரியேயாம். முக்கிய மொழியைச் சுட்டியதனனே பிரணவம் அதனோடு கூருமலேயமையும். பாதமல்லது பற்றிலர் என்பதனல்

குறள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடி சேரா தார்."

என்ற திருவள்ளுவரின் கருத்தோடு ஒத்திருத்தல்காண்க. இதன்றிப் பிரகலாதாழ்வான் கூறியுள்ள அரியட்டகம் என்கின்ற தோத்திரத்தில் நல்ல சித்தம் இல்லாதவனால் உச்சரிக்கப்படினும் "அரி" யெனுஞ் சொல் பாபத்தைப் போக்குமென்றும் அப்படி நீக்குதல் ஒருவன் அறியாது தற்செயலாகப் பரிசித்தாலும் தீக்குச் சுடுந்தன்மை இருத்தல் போலென்றும் காட்டப்பட்டுள்ளது. நம்மாழ்வாரும் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே என்று ஆஸ்திகர்களாய் வழிபடல் வேண்டுமென்பதை விளக்கியுள்ளார். ஸ்ரீ சங்கராசாரியாரும் "இராமகர்ணாமித" மென்னும்தோத்திரமும் "அரிமீடே" என்னுந்தோத்திரமும் செய்துள்ளார் தாரகவாச்சியன் இராமனென்பதே அவர் கொள்கை. அரியின் அவதாரங்களுள் இங்குக்கூறும் இராமன் 7-வது அவதாரம் செய்த பரம்பொருள். திருமாலுக் கடிமைசெய் என்றும் தெய்வமிகழேல் என்றும் ஔவை கூறியுள்ள முதுமொழிகளின் சாரமமைந்திருத்தலுங்காண்க. காரணபூதனும் தலைவனை வணங்கி அவன் குணக்கடலிலாடி அவன் பாதங்களைப் பற்றற்றவர் பற்றுவரென்பது சிறப்புப்பாயிரத்தின் முதன் மூன்று கவிகளின் சாரமாதலு முணர்க.

தி. வேங்கடராம ஐயங்கார்.

VEDANTADESIKA.

வேதாந்ததேசிகன் வைபவம்.

"లౌకికజ్ఞానహీనస్య వైదికం తు న సిధ్యతి" என்றவணம் லௌகிக விருத்தாந்தமே யுணரகில்லாற்குவரம்பில்கோதற்ற மாட்சிமையெய்திய வைதிகநெறியின் நுண்பொருள்களை யாய்ந்துணரும் வன்மை வாய்க்குமோவென்றும் சிகா, யஜ்ஞோபவீதம், திரிதண்டங்களொடு கூடிய ஸந்யாஸ பிராப்தியானது சகல பல சாதனமாகையால் இராவணாதிகளுக்குத் தம் மனோபீஷ்டத்தைப் பூர்த்தியாக்கியதுபோல், மோக்ஷாபேக்ஷிகளுக்கு எதையுஞ் சாதிக்குந் திறமையுண்டெனத் தெள்ளிதிலுணரற்பாற்று; ஆயின் முண்டஸந்யஸம் அரிதில் அற்பபலத்தையுஞ் சாதிக்கமாட்டாதன்றோ ?" என்று தாமும் லௌகிக மார்க்கத்தாலே மறுக்கொணா விடை கடாயினர். மிக்கமனமுளைந்த

வித்வான் மறுமாற்றஞ் சாற்றற்கிலாஞய் ஜீயர்க்குத் தொண்டனுயினன். ஆண்டுளோரால் வியந்துகொண்டாடி யீயப்பட்ட பல்வரிசைகளையு மேற்ற ஜீயர் பால் கடிகாசதகம் அம்மாள், கிடாம்பிநயினர், குமாண்டூரோச்சான், **பிள்ளையப்பை** யாதியோரும் ஆச்ரிதராயினர். பின்புஜீயர், பேரருளாளனையும், விளக்கொளி யெம்பெருமானையும் வணங்கி வாக்கியின் நன்மனையை விழைவொடு தொழுது விடைகொண்டு, சித்திரகூடத்திற் **கோவிந்தராஜனைப்** பராவி யங்கிருந்து கோயிலையெய்தி தேசிகமணியைக்கண்டு யேற்றிப் போற்றிப் பவ்யனுன வித்வானையுந் தொழச்செய்தொளிர, பிள்ளையவர் விருத்தாந் தங்களைக் கேட்டுவந்து பேரவாவோடு ஜீயரை நோக்கி "நீவிர் பாஷ்யகாரரென்றும், உலக சிருஷ்டியை யுஞற்று முந்திபுத்தோனைமான யுக்தி சிருஷ்டி செய்யும்பிரம்மனுகின்றீர்" எனவழுத்தி யுவப்பெய்தினர். கண்டகடிகாசதகம் அம்மாள் పర్యాయ భాష్యకారాయ ప్రణతార్తింవిధున్వతే என்ற தனியனையும் யனுஸந்திக்கத் தேசிகர் ஆனந்தித்து ஜீயருக்கு திருவாழி திருச்சங்குகளை யீந்து ஆட்பட்ட அவ்வித்வானுக்கு திருவிலச்சினையாதியாக ஸகல விசேடார்த்தங்களையும் அருளும்படி நியமித்து அனவனுக்கு ஜீயர் பெயராக **பேரருளாளையனப்பை** யெனத் தாஸ்யநாம மீந்தருளினர். இங்ஙனம் நிகழுமெல்வையில் தாஸ்யனுன வித்வான் ஜீயரை நோக்கி 'ஆழ்வாராதிகளிடதிருவவதாரக்ரமங்களை முறையே வனுஸந்தேயமாம் வணம் இயம்பவேண்டு' மென்றிசைக்க, ஜீயர் సిద్ధార్థిం శ్రవణే జాతం కాంచ్యాం కాంచనవారిజాత్, ద్వాపరే పాంచజన్యాంశం సరోయోగి, నమాంశ్రయే எனத்துவக்கி **திவ்யஸூரி ஸ்தோத்திரம்** என்ரெரு நூலையருளிச்செய்திய, வித்வானும் மற்றையோரும் 'இதற்குத்திராவிடத்தும் ஒருபனுவலிருத்தல் நல' மெனஜ் ஜீயர் விழைவின் வேண்டுகோளால் தேசிகர் பலருந் தெள்ளிதிற் பருகிப் பயிறற்பாலதாய்ச் செந்தமிழில்,—ஆழ்வார்களவதரித்த நாளோர் திங்கள்—என்று துவக்கி,—வேதாந்த குருமொழிந்த பிரபந்த ஸாரம்-சிந்தையினு லனுதினமுஞ் சிந்திப்போர்க்குச், சேமமதாந்திருமாறன் கருணையாலே—என்று முடித்து அதற்குப் **பிரபந்தஸாரம்** எனப் பெரும் பெயர் சூட்டி நாடோறு மநுஸந்தியா நின்றனர். இவ்வாறு பிள்ளை பெருங்கூட்டத்து முதலிகளோடு உபய வேதாந்தங்களையும், பஞ்சகால நித்ய கைங்கரியங்களையும், மற்றும் பிராணுதியோர் ஆஜ்ஞா கைங்கரியங்களையும் செவ்வனே புரிந்துகொண்டு శ్రీరంగద్విరద వృషభాద్రి என்று கோயிலாதிய தலங்களை யெல்லாம் நித்யமா வாழுமாறு மங்களாசாஸநஞ் செய்தருளி— இதுவழியால் மறையோரருளால் யாமிசைத்தனமே— என்றும்,—வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம், உள்ளத்தெழுதிய தோலையி விட்டனமே— என்றவாறே ஸ்ரீ ஹயக்ரீவ திவ்ய ஸூக்தியால்—అస్మద్దేశిక సంప్రదాయరహితైరద్యాపినా లక్ష్యతే என்றும்,—பொறைநிலத்தில் மிகும்புனிதர் காட்டுமெங்கள் பொன்ருத நன்னெறியில்புகுது

வாறே— எனச் சாற்றுமாபோல், இந்நெறி நீத்தோர் காடுபோய்வார்களென்றும், பெருவீடு சேருமவரும் இவ்வழியே வருவார்களென்றும் அருளிச்செய்து பண்டுபோன்றிருந்தனர். பிள்ளை வார்த்திகத்தை யடைந்த பின்னரும், ஒருநாள் கர்வித்துப் பெரிதும் நிர்ப்பந்தித்த ஒரு சிற்ப சாத்திரிக்காத் தம் போன்ற உருவை மெழுகினாலெடுத்துக் காட்டிக் கடிகையிலன்னானை யடக்கியாண்டனர். அன்னசிற்பியும் தங்கனவிற்றோன்றிப் பிரானருளியவாறே யவ்விக்ரஹத்தை ஞான முத்திரையுங் கோசமுங் கொண்டதாக் குயிற்றித் தாமிரத்தெடுத்து யாவருமுவப்ப வொப்பனைசெய்து மற்றையோரைமானத் தானும் பிள்ளைபாலீடுபட் டுய்ந்தனன். பிள்ளை யவ்விக்ரஹத்தை (யதோக்த லக்ஷணமாயிருப்பதால் அதாவது, தாஞ்சீவனோடிருக்கும் போழ்தே தன்போன்ற விக்ரஹ ரூபங்கூடாதென) ச்சேமித்துப் பிறகு **சிற்பசாஸ்திரஸாரம்** என்று ஒரு நூலையும் புனைந்தனர்.

இன்னணம் வேங்கட நாதாரியர் ஸ்ரீமாந் புருஷ: என்றவணமே நூறு ண்டிருந்து அந்தியத்திலொருநாள் பெரிய பெருமானைத் தொழுதுழிப் பெருமான் சாலவும் வியந்து பிள்ளையைக்குளிர நோக்கி,— "நீவிரிவ்வவனியில் இராமாநுஜமத ஸித்தாந்தத்தை நிலைக்கச்செய்து அரிய விருத்தராயினீர்; இனிசடக்கென நம் பெருநாடு புகக்கடவீ" ரென, வாதி: "அம்மா வடியேன் வேண்டுவதீதே" என்றுள்ளக்கிளர்ச்சியோடு முகமலர்ந்து பலமுதலிகளோடு ஆசாரிய கோஷ்டிகளை வந்தித்து வணங்குங்கால் தம்மர்ச்சகவாயிலா உடையவர் தூப்பில் நயினாரை விளித்து 'இனி யிச்சித்தாந்தத்திற்கு நீவிர் பிரவர்த்தகராகுவீர்' எனப்பண்டைபோலறைந்துபல்வரிசைகளையு மீந்து சிறப்பித்தனர். ஆங்கவரவைகளைப் பெற்றவாறே நம்மின் புற்றவாக்கி: 'உடையவராணையை யுளுற்றக்கடவீர்' என்றருளிப்போந்தனர். பெரிய பெருமான் நியமமனமோர்ந்த பெருங்கூட்டத்து முதலிகள், ஸ்ரீரங்கநாச்சியாராலயம் நுழைந்து நின்று 'இனியென் செயற்பாலது' என்றுளனைந் திருக்கக் கண்டவன்னையார்: "வேதாந்ததேசிக விக்ரஹமொன்று நம்பெருமான் கட்டளையின் வண்ணம் ஸ்ரீகோச, ஞானமுத்திரைகளோடு குயிற்றுவிக்கப்பட்டிருக்கிறது; அதையவ்வாக்கி நம்மேனுடெய்திய பின்னர்நஞ்சந்நிதி முன்பாகஅவர் பண்டுபோற் றரிசனப்ரவசனம் நிகழ்த்திவந்த இடத்தேயே பிரதிட்டிப்பித்து ஆராதியுங்கள்" என்று தம்மர்ச்சகமுகத்தா னிசைத்தருளினர். கேட்ட முதலிகள் 'ஜீவாதாரத்தைப் பெற்றோ' மென்று பெருங்களிப்பெய்தினர். பின்னர், கவிதார்க்கிககேஸரி சாலவுங்கிருதார்த்தராய்த் தம்மனைக்கேகி சிறிது நாளாக, மூப்பின் மேம்பாட்டான் மெய்மெலிந்து சரமதசையினராயிருக்க, கண்ட நயினாராதியோர் ஆளவந்தார் சரமதசையின் நியமனத்தையும், எம்பெருமானார் சரமதசையின் ஆஜ்ஞையையும் பலகால் கேட்டிருக்கையாலே பிரக்ருதி ஸம்பந்தத்தாலே கரைவுமுண்டாகிக் கண்ணீர் மல்கிப்

பெருக்கெடுக்க நின்றமாத்திரத்துத் தேசிகர்: அவர்களைக் காணாராய் 'நயினு ரிருக்க உங்களுக்கென்னையோ குறை?' என்னுங்கு நயினாரை விளித்து 'நம் மரங்க நாச்சியாரும் அழகிய மணவாளனும், இவர்களைப் பிரஸாதித்தரு ளினவுடையவரு மிருக்க உமக்கென்ன குறை' யென்றருளிச் செய்ய, சாத் திரமாதி யுணர்ந்தநயினார் அங்ஙனே தெளிந்து பிறரையுந் தெளிவித்து ஆசா ர்ய பக்தியி லீடுபெட்டிருந்தனர்.

பிற்றையோர் கார்த்திகை நாளில் வேதாந்தகோளரி பேரருளாளனை யும் ஸ்ரீ ஹயக்ரீவப்பிரானையும் மிகவாராதித்து அன்னார் ஸ்ரீபாதோதகத்தை வேணவா வருந்தி,விழைந்தவர்க்குத் தம் பாதோதகத்தையுமளித்துக்களித்து ஸ்ரீமந்நாராயணன் சரணகமலயுகளாநுஸந்தானம் புரியா நின்றுழி நயினார்:- రవిసద్రశతను శ్రీవేంకటాచార్య என்னுஞ் சுலோகத்தாலும், ஜீயர்: నమః పద ఖిదంభూయాత్తస్మై వేంకటసూరయె என்றதாலும், ஸ்ரீநிவாஸாரியர்:— వేదాంత దేశిక పదాంబుజ என்றதாலும் ஸ்தௌத்யஞ்செய்தஞ்சலித்து நின்றனர். காணு நின்ற வாக்கி பெரிதும் மகிழ்சிறந்து தம்மாராதனத்திருந்த சிறுவிக் ரஹரூபமானபேரருளாளப் பிரானையும்,அப்புள்ளாரீந்த திருவாழிதிருச்சங்கு களையு நயினார்க்கீந்து, தகவால் மற்றத்திருவாழிதிருச்சங்குகளையும் ஸ்ரீ ஹக்ய ரீவப்பிரானையும் ஜீயருக்கருளி, குறைவிலராய்ப் "பேரருளாளனுக்குஅவனது ஸ்ரீகார்யதுரந்தரராய் ஆட்செயவேண்டு" மெனத் திருமலை ஸ்ரீநிவாஸாசாரி யர்க்காணையருளித்தம்மாசியர் பாதுகைகளைச் சென்னிமிசை சூடி சிஷ்ய கோடிகளுக்குத் தக்கவாறு நன்னெறிகளை வேதமுறையாலே விளம்பி, நயினார் மடியிற் றிருமுடியும், ஜீயர் மடியிற் றிருவடியுமாய் அப்புள்ளார் பா தப்போதுகளை யுன்னியே யுவப்பொடு மேனாட்டினுந் தம்மதத்தை நிறுத்து வானுன்னியோ, அன்றித் தம்மை விடுத்ததிருநாரணன்பாற் றஞ்செயலைச் செப்புவான் கருதியோ, அன்றித் தம்முறையாய்ந்த விண்ணவர்தஞ் சொல் வன்மை யெத்தகைத்ததென ஆய்வானுன்னியோ, மற்றுஞ் சொல்லொணு வெக்காரணத்தாலோ ஸௌம்யவருடம், கார்த்திகை மாதத்தோர் தெய்தியில் ஆருடவிமானராய் ஹரிதாஸரேந்தத் திருநாடெய்தினர். எய்திய ஞான்றே,— అబ్దేసౌమ్యేశ్రవాణోగతవతి రవిః వృశ్చికం என்ற வடிகொண்ட சர்மச்லோகமும் நயினாராசாரியர் வாயிலாவெழுந்தது. அவர்தம் பிறிவாற்றாத வேனையோர், சா லவும்உளநைந்து கண்ணீர்மல்கமல்க,

அறநாடு வெய்தினிரோ! ஆங்கவர்க்கும் மதிதெருட்ட
அறநாடு வருந்திடநீ ரடியோமை விட்ட கன்றீர்
திறனோடு செழுங்கலைக டேர்ந்தபெருங் கோளரியே
குறுநாடு வென நினைந்தோ கோவேநீர் சென்றதரோ,

ஈங்கெம்மை யலையவிடுத் தெந்நாடு புகுந்தனிரோ
ஆங்கும்மை யடியிருத்த வருங்கமலை யழைத்தாளோ
தேங்கமழார் செழுந்துளவத் தார்மார்ப னழைத்தானே
நீங்கிலா வருஞ்சீர்த்தி நிகமாந்த கோளரியே!

வேறு.

ஒன்று மிரண்டு மூன்றாகி யொளிரும் பெம்மா னருள்வடிவை
நின்றுங் கிடந்து மிருந்து நினைத் திந்நிலத்திற் பணிந்திருந்தும்
என்றும் பெருநா டெய்தவரு மென்றே வுளத்து நனியெண்ணி
இன்றே செல்ல விழைந்தனிரோ வெவர்க்கு மஞ்சா விருங்களிறே!
பாரிற் பல்லோ ருமைவருத்தப் பண்பா னன்ன பற்றலரை
நேரில் வென்றார் நிகமாந்த நிகரில் லாளி யெனவழுத்தப்
பேரின் மாட்சி நனிபொறுத்துப் பைங்கூழ்களையைக் களைவான்போல்
நேரில் ராமா நுஜமதத்தை பிறிதைக்கொண்டு நிறுத்தியவ!
எதற்குஞ் சுதந்த்ர ரெனவழுத்த விந்நீணி லத்திற் பெயரெய்தி
சுதற்குஞ்சொல்வானருள்கொடுத்துத்தோன்றாத்துணையாச்சென்றனிரே
அதற்கும் முப்பா லாற்றினுக்கு மருளாம் பெரிய வெள்ளொளியை
இதற்கும் மேலா யினதொன்று வில்லை யென்னு வடைந்தீரோ?
அடைந்தும் பிரிதில் லவனியெலா மடியோமோடு மழுதரற்றி
மிடைந்துஞ் சாம்பு மாறேபோன் மிக்கோய் காணவருமதனை
யடைந்துங் களைவா னென்றுகொலோ எவீரண்ணு லருள் வாக்கி!
மடைநந் துருளும் மாநிலத்தை மறந்தீர் மறந்தீர் மறைந்தீரே!

என்னவாவரற்றி மீளவுந்தேறி யச்சரமதிருமேனியை ఐశాకైః కేసరింహాయ కల్యాణగుణశాలినే శ్రీమతే వేంకటేశాయ వేదాంతగురవే నమః என்றனுஸந்தித்துப் பிரதக்கண நமஸ்காரஞ் செய்து நீராட்டி ஸ்ரீசூர்ண பரிபாலனமாதிய பிரம்ம வேதங்களை நிகழ்த்தித் துவாதசாந்ஹியில்உடையவர் நியமனத்தின்வண்ணம் பரக்கத் திருவத்யயனோத்ஸவஞ்செய்தனர். பின்னர்நயினார்:நாச்சியார்நவின்ற படி யவர் ஸந்நிதியின் முன்பே தேசிக திவ்ய மங்கள விக்ரஹத்தை பிரதிட்டை செய்து முறையே வழாது ஆராதித்துக்கொண்டே யாவருங் கோணு மனத்தராய் விரும்பி யேற்றதன் வணம் நிகழ, ஸித்தாந்த ப்ரவசனம் புரிந்து வந்தனர். ஏனையவருந் தத்தமக்கிட்டவாணை கடவாது புரிந்து மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

மங்களம்.

V. K. அரங்காசாரியர்.

ANTIQUITY OF THE TAMILS.

தமிழர் பழமை.

புறவுரை.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுண்
மின்னேர் தனியாழிவெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

எனப் பண்டையோர் தமிழ்மொழியை வையத்து மாந்தர் வழங்கும் மொழிகளுக்குள் ளெல்லாம் சிறந்ததென்று மேம்படப் புகழ்ந்து பாடினர். மலையின் உச்சியிற் றோன்றி அறிவின் மிக்கார் வணங்கஞாலத்து இருளை அகற்றும் பொருள்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று மின்னலைப் போல் ஒளி வீசும் ஒற்றை ஆழியிற் செல்லும் செஞ்ஞாயிறு, மற்றது 'தன்னேரிலாததமிழ்' என்றார். இங்ஙனம் புகழப் பட்டதமிழ்ஒருமலையினிடத்தே அதாவது, ஒருமலை நாட்டிலே பிறந்ததென்றார். அவ்வாறே பாரதம்பாடிய வில்லிபுத்தூரருடைய புதல்வராகிய வரந்தருவார் என்னும் அருங்கவிப்புலவரும்

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்."

எனத் தமிழ் அணங்கனுக்குப் பல்லாண்டு கூறுங்கால் அவ்வணங்கு பொருப்பிலே பிறந்தாள் என்றார். ஒருமலையி னிடத்தேபிறந்து, தென்னாட்டுக்கு அரசனாகிய பாண்டியனுடைய புகழாகிய தொட்டிலிலே வளர்ந்து, சங்கப்பலகையிலே உட்காந்து வைகையாற்றிலே சம்பந்த மூர்த்தி நாயனார் இட்ட எட்டிலே தவழக்கற்று அந்நாயனார் நெருப்பிலே இட்ட எட்டின் மேலே எழுந்து நின்ற தமிழாகிய தெய்வப்பெண் கற்றோருடைய நினைவிலே நடந்து பூதேயின் மருங்கிலே இன்னும். பேதைப் பருவம் கடவாது விளங்குகின்றாள் என உரைத்தார்.

இப்பொருளை அமைத்தே அமுதசாகரரும் தாம் இயற்றிய யாப்பருங் கலக்காரிகையின் அவையடக்கத்திலே:

"தேனார்கமழ் தொங்கல் மீனவன்
கேட்பத் தெண்ணீரருவிக்
கானார் மலயத் தருந்தவன்
சொன்ன கன்னித்தமிழ்நூல்." (தொடரும்)

V. கனகசபை பிள்ளை, B. A., B. L.

UTTERANCES OF THE DAY.

நவீனப் பிரசங்கங்கள்.

இராஜா பியாரி மோகன் மோகர்ஜி. யென்பார் கல்கட்டாவில் தொழிலபி விருத்தி நோக்கமாய்ப் புதிதாகஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சபையின் சம்பந்தமாக ஹூக்லியென்ற இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடக்க, ஆக்கிராசனம் வகித்துச் சொன்னதாவது:—

"குறுகின உணர்ச்சியும் தனிமைக் குணமும் நீங்கி நம்மவர்கள் உண்மையான ஜன ஐக்கிய பாவத்தை மனதிற்கொள்ள நான் பார்க்க விரும்புகிறேன். தனக்குச் சுதந்தரங்கள் வேண்டுமென்றும் தனக்குப் பாத்தியங்கள் வேண்டுமென்றும் விரும்புவதை விட்டு, எல்லாருக்கும் உள்ள உரிமைகளைக் கவனிக்க வேண்டும். பணமே தெய்வமென்றும் சுகமும் இன்பமுமே மேலென்றும் கருதுவதை யொழித்து, பெருங்காரியங்களைச் செய்து பெருமை பெற வேண்டுமென்ற அவா மேலிடவேண்டும்; பூர்வம் நம் முன்னோர்களுக்கிருந்தது போல, துன்பங்களை யனுபவிக்கத் தைரியமும் தேசத்தி லன்புவைத்து எதையுமிழங்கும் இயல்பும் இருக்கவேண்டும். சுருக்கிச்சொல்லில், தன் தன் லாபத்தைத் தேடுவதை வெறுத்து, ஜனங்களது நல்லிருப்பை விரும்புவது வேண்டும்.

"இங்கிலண்ட், பிரான்சு, ஜர்மனி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய கியாதி பெற்ற தேசங்கள் பெருமை யடைந்து தற்கால நிலைமைக்கு வந்தது இப்படிப்பட்ட குணங்களாலே யொழிய வேறு காரணத்தாலல்ல.

"ஜனநலப் பான்மையின்றிசாஸ்திரங்களும் கலைகளும் தற்காலத்தில்இந்தியாவில் எப்படி விர்த்தியாகும்?"

இது பொய்யோ? இவ்வாறு கூறியவர் யார்? சாமானியரோ? அன்று; அவரோ "பங்காளத்து ஜமீன்தார்களில் தலைமை யெற்றவர்; ராஜாங்கத்தாரால்நன்குமதிக்கப்பட்டவர்: ஸி. ஐ. இ. (C. I. E.) பட்டம் பெற்றவர்; அனேக சபைகளிலும் ஸ்தாபனங்களிலும் பெருமையான சம்பந்தத்தைப் பெற்றவர்."

ஹானரபில் Mr. L. A. கோவிந்தராகவைய்யர் இராணிப்பேட்டை கான்பிரான்ஸில் விவசாய விஷயமாகச் செய்த பிரசங்கம்.

"இந்திய விவசாயிகள் மற்றத் தேசங்களிலுள்ள விவசாயிகளை யொப்ப க்ஷேம நிலையுடையராய்ச் சுகவாழ்வு வாழ்வதில்லை யென்பது தெரிந்த விஷயமே. அவர்கள் வயிறு பிழைப்பதற்கு ஆதாரமாயுள்ள நிலங்களின் விளையும் சக்தியோ நாளுக்குநாள் குறைந்துகொண்டுவருகிறது. அதுபற்றி அந்நிலங்கள் தக்க மாசூலைக் கொடுப்பதில்லை. அறுவடையாகும் மாசூலைக்கொண்டு விவசாயிகள் சர்க்கார் கிஸ்தியைக் கட்டிவிட்டு அடுத்த பசலியில் மறுபடியும் நிலங்கள் சாகுபடியாகி அவைகள் மாசூலைக் கொடுக்கும்வரையில் சாப்பாட்டுக்கு என் செய்வோமென்று கண் கலங்காதிருப்பதில்லை. சில சமயங்களில் விளையும் தானியம் சர்க்கார் கிஸ்தியைக் கட்டக்கூடப்பற்றுவதில்லை. அப்படிப்பற்ருமற் போவது காரணமாக அவர்களுக்கு ஒரு வேளைச் சோறு கிடைப்பதுகூட அருமையாகிறது. இப்படி வருஷக்கணக்காய் இந்திய விவசாயிகள் அனேகமாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டு தானிருக்கிருர்கள். ஏதோ சில வருஷங்களில் நிலங்கள் அமோகமாக விளைகின்றன. அப்படி விளையும் வருஷங்களில் நம்மவர்கள் சிறிது சுகப்படுகிருர்கள். விளையாத வருஷங்களிலோ, அவர்கள் படுங் கஷ்டத்திற்கு அளவில்லை. நாட்டில் பஞ்சம் பரவுகின்றது. அப்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் இறந்தேபோகிருர்கள்.

"இப்படி இந்திய விவசாயிகள் ஓய்வு ஒழிவின்றிப்படுங் கஷ்டத்திற்கு நிவர்த்தி யில்லாமற் போகவில்லை. மிஸ்டர் காலில் ஸ்டூவார்ட் காஞ்சீபுரம் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் பேசியபோது இங்கிலண்டிலே 18-வது நூற்றுண்டில் ஒரு ஏகருக்கு 11-புஷல் விளைந்துகொண்டிருந்த நிலங்கள் இப்போது 39 புஷல் விளைகின்றனவென்றும், அங்கு அப்படி விளைவதுபோல இந்தியாவிலும் விளையும்படி செய்யவேண்டு மென்றும் சொன்ஞரல்லவா? அப்படிச் செய்வதுதான் நிவிர்த்தி. அவர் சொல்லியபடி விளையும் வண்ணம் செய்யவேண்டுமாஞல் நாட்டில் விவசாயக்கல்வி பரவும்படியான ஏற்பாடு செய்வதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டில் விவசாயக் கல்வி பரவி விவசாயத் தொழில் முறைகள் விருத்தியாஞலன்றி நில

ங்களின் விளையும் சக்தி அதிகப்பட்டு அந்நிலங்கள் அதிக மாசூலைக் கொடுக்கப்போகிறதில்லை. அம்மாசூலைக்கொண்டு ஜனங்கள் வயிறு நிறைய உண்டு சுகஜீவனம் செய்யப்போகிறதில்லை. நாட்டில் பஞ்சம் பரவாமலிருக்கப் போகிறதுமில்லை.

"ஆனால் நம்மவர்களுள் சிலர் இப்போது அனுசரிக்கப்படும் விவசாய முறைகளைவிடச் சிறந்த முறைகளில்லை யென்றும், அப்படியே இருந்தபோதிலும் அம்முறைகளை அனுசரிக்கப் பிடிக்கும் செலவைப் பொறுத்துக்கொள்ள முடியாத அவ்வளவு ஏழைகளாய் விவசாயிகள் இருக்கிறார்க ளென்றும் வாதிக்கிறார்கள். விவசாயிகள் பரம ஏழைகளாயிருப்பது மெய்யானாலும், அவ்வேழ்மையோடு அவர்கள் தங்கள் நிலைமையை இன்னவிதமாய் விருத்தி செய்து கொள்ளலாமென்று தெரிந்துகொள்ளப் போதுமான அறிவில்லாதவர்களாயும் யாதொரு பயற்சியையும் பெறாத புத்தியை யுடைவர்களாயு மிருக்கிறார்கள். அதுபற்றி நாட்டில்முற்பட சகல படிப்புகளுக்கும் அஸ்திவாரமாயுள்ள பிரைமரிப் படிப்பு விசேஷமாய்ப் பரவவேண்டும். அப்பிரைமரிப் பள்ளிக்கூடங்களி லேயே விவசாய சம்பந்தமான விஷயங்கள் ஆரம்பத்திலிருந்தே சிறுவர்களுக்குச் சொல்லி வைக்கப்படவேண்டும். அப்படிச் சொல்லிவைப்பதற்குத் தனியாக விவசாய வகுப்பொன்று பிரைமரி பள்ளிக்கூடங்களிலிருக்கவேண்டும். அவ்வகுப்புக்கு விவசாயத்தொழில் முறைகளில் நல்ல பரிச்சியமுள்ள ஒரு உபாத்தியாயர் தனியாகவே இருக்கவேண்டும். அப்பள்ளிக்கூடங்கள் பாதிநாள் வேலை செய்யும் பள்ளிக்கூடங்களாகத்தானிருக்கவேண்டும். விவசாயத் தொழில் முறைகளின் நுட்பங்கள் சிறுவர்களுக்கும் தெரியும்படி விவசாயக்கல்வி நாட்டில் பரவவேண்டுமானால்பிரைமரிப்பள்ளிக்கூடங்களில் விவசாயம் ஒருவிசேஷபாடமாகச் சொல்லிவைக்கவேண்டும். இப்போதே விவசாயத்தொழில் முறைகளை விருத்தி செய்வதற்கேற்றசில உபாயங்களுமுண்டு. இந்நாட்டில் வெவ்வேறிடங்களில் நிலங்களைச் சாகுபடி செய்யும் முறைகள் வெவ்வேறு விதமாயிருக்கின்றன. கூர்ச்சர நாட்டில் அனுஷ்டிக்கும் முறைகள் மத்திய மாகாணங்களில் அனுஷ்டிக்கப்படுவனவல்லவென்று டாக்டர் வோயல்கர் சொன்னது உண்மையென்றே ரூபிக்க முடியும். திருநெல்வேலி ஜில்லா விவசாய முறைகளுக்கும் தஞ்சாவூர் ஜில்லா விவசாய முறைகளுக்கும் எவ்வள

வோ வித்தியாசமிருக்கிறது. ஒரே மாகாணத்தைச் சேர்ந்த ஜில்லாக்களில் விவசாய முறைகள் மாறுபடுமானால் மாகாணங்கள் தோறும் விவசாய முறைகள் வித்தியாசப்படுதல் சகஜந்தானே. ஓர் இடத்து விவசாயிகள் மற்றவிடங்களிலுள்ள விவசாய முறைகளிற் சிறந்தனவா யிருப்பவற்றைத்தழுவவேண்டும். விவசாயிகள் விதைக்கும் விதைகளைப்பற்றியும், நிலங்களுக்கு போடக்கூடிய உரங்களைப்பற்றியும் இன்னும் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. நம்மவர்கள் மாசற்ற விதைகளை விதைப்பதில்லை. நல்ல உரங்களை யிடுவதில்லை. மாசற்ற விதைகளை விதைப்பதை விட்டுத் தங்கள் நிலத்தில் விளைந்த தானியத்திலிருந்தே கிடைக்கக்கூடிய விதையினை எடுத்து விதைக்கிறார்கள். அவ்விதைகள் நல்ல மாசூலைக் கொடுக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள். அதுவே யன்றித் தங்கள் முன்னோர்கள் காலந் தொட்டுப் போடப்படும் எருவையே போடுகிறார்கள். பூமியின்விளையும் சக்தியை அதிகரிக்கக்கூடிய வேறு எருக்களைப் போடுவதில்லை. அப்படி நம்மவர்கள் பாதி அறியாமையாலும், பாதி ஐவேஜியின்மையாலும் செய்கிறார்கள். கிராமம் கிராமமாய்ச் சுற்றித் திரியும் விவசாய இன்ஸ்பெக்டர்கள் ஏற்படவேண்டும். அவர்கள் ஊர் ஊராய்ச் சென்று விதைக்கப்படும் விதைகள் இம்மாதிரியாயிருக்க வேண்டுமென்பதாகவும் போடப்படும் உரம் இன்னமாதிரியா யிருக்க வேண்டுமென்பதாகவும், இன்னமாதிரி விவசாய முறைகள் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்பதாகவும் விவசாயிகளுக்குப்போதிக்க வேண்டும். அந்த இன்ஸ்பெக்டர்கள் மிஸ்டர் சாட்டர்டனுடைய பிரேரேபணையைத் தழுவிக் கவர்ன்மெண்டார் ஸ்தாபிக்கப்போகிற மாதிரிப் பண்ணைகளின் தலைவர்களாயிருக்கலாம்.''

சுதேசமித்திரன்.

PERIODICAL LITERATURE.

பலபத்திரிகா விஷய சங்கரகம்.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி சுவாமிகள்.

யதார்த்த பாஸ்கரன்.

திருவாவடுதுறை மடத்துத் தலைவராம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதி சுவாமிகளைக் கண்கள் செய்த தவப்பயனாகத் தெரிசித்தோம். சுவாமிகளது திருவுருவப் பொலிவினை யொருமுறை கண்டார் தம்மைக் காணராயினர். அவரது சல்லாப விசேஷணங்

களை எக்காலத்தும் மறத்தலரிது. தமது சந்நிதியிற் போந்தார் யாவரையும் அருள் நோக்கம் செய்துபசரித்த நந்தம் பெருந்தகையின் புகழை வாயாரப் பேசா தொழிந்தார் தமையாண்டுங் காணேம்.

நங்குருமணிச் செல்வம்—ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள்—பரசிவனே யிக்கலியில் பலரறியவருட் கோலங்கொண்டு யெம்மை யாண்டருளப் போந்ததென விளங்கினர். இளஞ் சூரியனென்னப் பிரகாசித்த நந்தம் பெருந்தகையார் சிவார்ச்சனை செய்வான் சிவனிடஞ் செல்வுழி அவரது வெழிலி வீடுபெட்டவடியர் குழாம் இவரே சுந்தரம் பூத்தாநந்தம் சுந்தரம், இவரே, ஞானசம்பந்தம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் என வயிர்த்து அடிகளார் அடிக்கமலம் பணிந்து போற்றினர். சந்நதியாஞ்ஞாபிக்க சந்நதியடைந்தோம். சுவாமிகளுடன் சில நேரம் அளவளாவியிருந்தோம்; தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் அவரடைந்துள்ள பாஷா ஞானத்தைக் கண்டு வியந்தேம். சித்தாந்த வேதாந்த சாஸ்திரங்களில் அவரடைந்துள்ள தேர்ச்சியள விட்டுச் சொற்றலரிது. பல வைதிக சாஸ்திர துறைகளினும் அபாரமான கல்வித்திறமைபை யார்ஜ ஜித்த நமது புண்ய மூர்த்தம், காலதேச வர்த்தமானங்களைத் தழுவிமேல்நாட்டாரதுவிஞ்ஞானசாஸ்திர வுணர்ச்சியும், மேற்புல கலைஞான வறிவும், பன்னாட்டுத் தத்வ ஞான முதிர்ச்சியுமுடையராய் வாழ்தலைக் கண்டிறும் பூதடைந்தனம். இம்மட்டோ? ராஜாங்க சீர்திருத்தமென்ன, ஆசார சீர்திருத்தமென்ன, பொருள் விருத்திச் சாத்திரமென்ன, பொருட் காட்சிச் சபா விஷயங்களென்ன, நம் நாட்டு பிறர் நாட்டுச் சரித்திரவாராய்ச்சியென்ன, பிறமத விசாரணையென்ன,—இன்னோரன்ன பலவரிய பெரிய விஷயங்களினும் அவகாசம் நேர்ந்துழி சுவாமிகள் தமதுகவனத்தைச் செலுத்தியுள்ளாரென்றும் உணர்ந்து ஆனந்தம் பூத்தேம். இவர் தமிழ் மாதை கௌரவிப்பான், தமிழ்ப்பண்டிதரை யாதரித்தும், தம்மைபடுத்தோர்க்கு வேண்டுவ உதவியும், யோக்கியதை யுடையார்க்கு அவ்வப்போதும் யோக்கியதை யறிந்து சன்மானித்தும் வரையாது வழங்கும் வள்ளலென பலரும் வாழ்த்த வாழ்வரென்ப. குறிப்பறிந்தியும் இவரது கொடையை யாமும் நேரே கண்டு மனுபவித்தும் சிறப்புற்று நின்றேம். ஜீவர்களிடத் திவரது கருணைத்திறமிருந்தவாறென்னே என்னே

DEPARTMENTAL REVIEWS AND NOTES.
பலதுறை விசேடக் குறிப்புகள்.

Agricultural, Industrial and Commercial.

விவசாயம், கைத்தொழில், வியாபாரம்:—

விவசாய தீபிகை.—இதுஒர் மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை. சென்ற எப்ரல் மீ முதல் சைதாபேட்டையினின்றுந் தோன்றி எழில்பெற உலவி வருகின்றது. இதன் சித்திராங்கங்களுக் கெழுதுவோர் அனைவோரும் விவசாயவிஷயங்களிற் கைதேர்ந்துள்ளவர்களே. விவசாயகல்லூரி இரண்டாவது போதகரும், டிப்டிகலெக்டரும், சப்மாஜிஸ்திரேட்டும், விவசாயபோதகர்களுமே இதுவரை அதற்கு எழுதினவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் எடுத்துக் கொண்டவிஷயத்தை நலமே கையாடியுளர். பத்திரிகை யோடெம்மி அளவு; 8 பக்கம் கொண்ட 4 பாரம். அதாவது 32 பக்கம். இதன்பத்திராசிரியர் மகா ா ா ஸ்ரீ வானமாமலை பிள்ளையும் சைதாப்பேட்டை விவசாயக்கல்லூரி யிலேபடித்துத் தேர்ந்தவர். இவர்பத்திரிகை விஷயமாகத் திரிகரணசுத்தியோ டுழைப்பதுவே பத்திரிகையின் அபிவிருத்தியை விளக்கிக்காட்டுகின்றது. வருஷசந்தா ரூ 1-8.

இந்தியாவில் கோதுமைப்பயிர்:—

இப்போது நடக்கும் விவசாய வருஷத்தில் இந்நாட்டில் கோதுமைப் பயிர் விளைவிக்குக் குறையில்லை. கோதுமை அமோகமாய் விளைந்திருக்கிறது. சென்ற விவசாயவருஷத்திலே நல்ல விளைவென்று கருதப்பட்டது. இவ்வருஷ விளைவோ சென்றவருஷத்து விளைவை விட 100-க்கு 21-பங்கு அதிகம். தவிரவும் சென்ற வருஷம் 100 ஏகர் கோதுமைப் பயிராயிருந்தால் இந்த வருஷம் 120 ஏகர் பயிராயிருக்கிறது. 45-லக்ஷம் ஏகர் சென்ற வருஷத்தைவிட அதிகமாய் கோதுமைபயிரா யிருந்த போதிலும் 1895- 1896-ம் வருஷத்தில் பயிரான கோதுமையை விட இப்போது பயிராயிருக்கும் கோதுமை குறையென்றுதான் சொல்லவேண்டும். ஆனால்கோதுமை மிகுதியாய்ப் பயிராகும் வட இந்தியா பிரதேசங்களில் இந்த வருஷம் கோதுமைப் பயிராயிருக்கும் விஸ்தீரணம் மற்ற வருஷங்களில் பயிரான விஸ்தீரணத்தைவிட அதிகம் ஐக்கிய மாகாணங்களில் இதற்கு முந்தி எந்த வருஷத்தில் கோதுமை அதிகம் பயிராயிற்றென்று கருதப்பட்டதோ அந்த வருஷத்தில் பயிரானதைவிட 9,75,000. ஏகர் அதிகமாய்ப் பயிராயிருக்கிறது. பஞ்சாப் மாகாணத்திலோ இதற்கு முந்தி எந்த வருஷத்தில் கோதுமை அதிகம் பயிராயிற்றென்று கருதப்பட்டதோ அந்த வருஷத்தில் பயிரானதை விட 3,60,000-ஏகர் அதிகமாய்ப் பயிராயிருக்கிது. பஞ்சாப் மாகாணத்தில் இப்போது ஜீலம் சீனுப் கால்வாய்ப் பிரதேசங்களில்கூட கோதுமை பயிராகின்றது. பஞ்சாப் மா

காணத்திலும், வடமேற் கெல்லை மாகாணத்திலும் மார்ச் மாதத்தில் ஏதேஷ்டமாய்ப் பெய்த மழை கோதுமையின் விளைவுக்கு எவ்வளவோ அனுகுணமாயிருந்தது. அதுபற்றி மாசூல் அமோகமாய்க் கிடைத்தது. ஆனால் அம்மாகாணங்களிற் பெய்த மழை மத்திய மாகாணங்களிலும் பேரார் நாட்டிலும் பெய்ய, அப்பிரதேசங்களிற் பயிராய்க் கொண்டிருந்த கோதுமை கெட்டுப் போயிற்று. ஆகவே மத்திய மாகாணத்தாரும் பேரார் நாட்டாரும் இவ்வருஷம் நமக்கு நல்ல கோதுமை மாசூல் கிடைக்குமென்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தது வீணாயிற்று. பம்பாயிலோ மற்ற இடங்களில் கோதுமை மாசூல் குறையேயாயினும், சிண்டு நாட்டில் மட்டும் நல்ல விளைவுதான். கோதுமை விளையக்கூடிய மற்ற மாகாணங்களிலும் விளைச்சலுக்குக் குறையில்லை. 1899-ம் வருஷத்துக்குப் பிறகு உயர்ந்து கோதுமை இப்போது எங்கும் மலிந்து விற்கின்றது.

ஓர் வியாபாரப்பட்டம்:— இது பொழுது இலக்கிய இலக்கணதத்துவ சாஸ்திரமாதியவைகளுக்கே சர்வகலா சங்கத்தார்கள் அவரவர்களது வித்தியாதரர்களுக்கு நானாவிதமான பட்டங்களைப் பரீக்ஷைக் கிரமப்படி தந்துவருகிறார்கள். வருஷா வருஷம் ஆயிரக் கணக்கில் பட்டாதாரிகள் வெளியேறுகிற[illegible]. இப்பொழுதோ இங்கிண்டிலே மான்செஸ்டர் என்னு மகாணத்தி[illegible]ாசங்க மிருக்கின்றது. அச்சங்கத்தார்களோடு வியாபார வர்த்தக [illegible]ங்கள் அறிந்து பெருகவேண்டுமென்னும் பேரெண்ணத்தோடு ஒருபட்டத்தை நிறுமிக்க வேண்டுமென்று சர் ஆடம் என்பவர் விதிகளை எழுதி அனுப்பி வாதித்து வருகிறார். ஆடம் முந்திப் பம்பாய்வர்த்தக சேம்பர்வில் பிரவிடெண்டாயிருந்தவர். வியாபார நீதி உயர்பரீக்ஷை ஏற்படுவது உசிதமே. அதனால் அநேக லாபங்கள் விளையும். தடையில்லை.

சென்ற் லூயி பொருட்காட்சி.—அமெரிக்காவில் சென்ற் லூயி பொருட்காட்சிச் சாலை சென்ற மாதம் முதலில் திறக்கப்பட்டது. இதுகாறும் உலகத்தில் நடைபெற்ற பொருட்காட்சிகளி லெல்லாம் இதுவே பெரிதும் விசேஷமுமானது. இதில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு கடிகாரத்தின் நிமிஷங்காட்டும் முள்ளின் நீளம் 60 அடி.

ஒரு நூதன கைக்கடிகாரம்.—கடிகாரங்கள் செய்வதில் பிரக்கியாதி பெற்ற சுவிட்ஸர்லாந்து தேசத்தில் ஒருவர் ஒரு விநோதமான மின்சாரக் கைகடிகாரம் செய்திருக்கிறார். அதற்கு 15 வருஷ காலத்துக்குச் சாவி கொடுக்கவேண்டிய தில்லையாம்.

பறக்கும் யந்திரம்:—சுமார் 25 டன் பாரத்தை யேற்றிக் கொண்டு மணியொன்றுக்கு 100 மைல் வீதம் பறக்கக்கூடிய நூதன யந்திரமொன்றை அமெரிக்க எஞ்சினீரொருவர் செய்திருக்கிறார்.

2. Educational கல்வி:—

மகமதியநட் பேண்கல்வி:—மகமதியருக்குள் பெண்கல்வி எவ்வளவு துர்லபமாயிருக்கிற தென்பதைப் பிற்கூறிய கணிதத்தா லறியலாமல்லவா? கோடி மகமதிய ஜனங்களுள் 4,000 பெண்கள் மாத்திரம் பள்ளிக்கூடங் களில் வாசிக்கிறார்கள். இதன்படி 15,000 பேரில் ஒருபெண் மாத்திரம் கல்வி பயின்றுவருகிறாள்.

குருடர் பத்திரிகை:—குருடர் கல்விகற்கும் பாக்கியம் பெற்றிருந்தாலும் இதுவரையில் அவர்களுக்காக யாதொரு வர்த்தமானப் பத்திரிகையும் எற் படவில்லை. இப்போது வியன்னாவில் குருடருக்கென்று ஒரு வாரவர்த்த மானி பிரசுரிக்கப்படுகிறது. இப்பத்திரிகை இதரபத்திரிகைகளைப் போலவே சகலவிஷயங்களையும் அடக்கிக்கொண் டிருக்கின்றது.

மகமதிய வாலிப வேற்றி:—கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக் கணிதவகுப்பில் உயர்ந்த கவுரதைக்குரிய அந்தஸ்தை இந்தமுறை ஒரு இந்திய மகமதியர் பெற்றுக்கொண்டிருக்கிறார். இவர் அலஹாபாத்துச் சர்கலாசாலையி லிருந்துபோன டாக்டர் வியாவுடீன் மகாமட் என்பவர். இவருக்கு கேம் பிரிட்ஜ் சர்வகலாசாலையார்வருஷம் 200 பவுண் வித்தியா சம்பளம் கொடு த்து வருகிறார்கள்.

கவிபாடும் சக்கிரவர்த்தி:-உலகத்திலுள்ள சக்கிரவர்த் லெல்லாம் அதிக கவிபாடுந் திறைமைவாய்ந்தவர் ஜப்பான் சக்கிரவர்த்தியாம். ஒரு நாளில் 31 சீர்கொண்ட விருத்தங்கள் 30க்குக் குறையாமல் எழுதுவாராம். இப்பாடல்களைப் பரிசீலனை செய்வதற்கென்று ஒரு வித்வான் நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர் சென்ற 10 வருஷகாலத்தில் சக்கரவர்த்தி பாடின 37,000 விருத்தங்களைப் புத்தகரூபமாக அச்சிட்டிருக்கிறாராம். ஜப்பானிய சச்கிரவர்த்தியும் கவிபாடுந்திறமை படைத்தவர்.

3. General போது:—

ஒருசிவிலியன் பாதிரி:—சென்னை ரெவினியூ போர்டில் ஒரு மெம் பராயிருந்த மிஸ்டர் A. W. B. ஹிக்கின்ஸ் (Higgens) வேலையைவிட்டு நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றுவருபவர் இப்போது இங்கிலண்டில் ஒரு மாகாணத்தில் ஒருபாதிரியாய் அமர்ந்திருக்கிறார்.

ஜஸ்டிஸ் அஷுடோஷ் முக்கர்ஜி:—இந்திய சட்டசபை ஜனப்பிரதிநிதி யங்கத்தினர்களுள் ஒருவராயிருந்த ஆனரேபில் டாக்டர் அஷுடோஷ்முக் கர்ஜி கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜ் ஸ்தானத்தை வகித்து வேலைபார்க்க ஆரம்பித்துவிட்டார்.

கோச்சி மகாராஜா:-தமது பரிவாரத்துடன் கழிந்த மே மீ மாசம் 20-ந் தேதி புதுச்சேரிக்குப் போய் பிரென்சு கவர்னரவர்களைச் சந்தித்து மதிப்

பாக ஓர் பெரியகௌரவப் பட்டத்திற்காளானூர். கூடப்போயிருந்த திவான் பட்டாபிராமராவ் அவர்களுக்கு மோர்பட்டம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நமது மகாராஜா வானவர் ராஜாங்கத்திலுள்ள ஒவ்வொரு டிபார்ட்மெண்டின் வரவு செலவுகளைக் கவனித்து வேண்டிய ஒழுங்குகளையும் சட்ட திட்டங்களையும் செய்து விருத்தியாக்கி வந்திருக்கின்றமையால் கர்ஸன் பிரபு அவர்களாலும் சென்னைக் கவர்னரவர்களாலும் சுதேசவரசர்க்குள் மகா சமர்த்தரென்றும் புத்திசாலியென்றும் புகழப்பட்டுத் தகுந்த கௌரவப் பட்டங்களைப் பெற்றுமிருக்கிறூர். வேதாந்த விஷயங்களிலும் சம்ஸ்கிருத பாஷையிலும் தென்னிந்தியாவில் ஒப்பும் நிகருமில்லாதவரென்றும் புகழ்ப்பட்டு வருகிறூர்.

Mr. S. கிருஷ்ணசாமி ஐயர். M. A. சென்னைச் சர்வசலாசங்கத்து M. A. பட்டதாரியாகிய பெங்களூர் ஸெண்டிரல் காலேஜ் மிஸ்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரை லண்டனிலுள்ள ராயல் ஹிஸ்டாரிகல் சொஸைடி (Royal Historical Society) யார் தங்கள் சங்கத்தைச் சேர்ந்த ஒரு சகாவாவாகத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறூர்கள். சரித்திர ஆராய்ச்சி செய்வதில் விசேஷ ஊக்கமும் சாமார்த்தியமும் காட்டிவருகிறவரை லண்டனிலுள்ள சங்கத்தார் தெரிந்தெடுத்தது நம்மவர்களுக்குப் பெருமையேயாகும். திருவனந்தபுரம் வலியகோவில் தம்பிரான், மிஸ்டர் V. நாகமய்யா இவர்களுடைய சிப்பார்சின்மேல் அவர் அச்சகா பதவியை யடைந்ததாய்த் தெரிகிறது.

அதிர்ஷ்டமுள்ள சதிபதிகள்:—ஜெர்மனிதேசத்தில் விவாக நிலைமைக்குட்படும் சதிபதிகளை மிகவும் அதிர்ஷ்டசாலிகளென்று சொல்லவேண்டும். ஏனெனில் அவர்கள் தங்கள் கலியாணச் செலவுக்காகத் தாமே ஒரு காசும் செலவழிக்க மாட்டார்களாம். அவர்களுடைய சிநேகிதரே சகல செலவும் செய்து விவாகத்தை நடத்தி வதூவரர்வாழ வீடு முதலாக வாங்கிக்கொடுத்து விடுவார்களாம். இவர்களல்லவோ அதிர்ஷடசாலிகள்?

4. Scientific **சாஸ்திரம்:—**

சூரியன் குறைதல்:—நாடோறும் சூரியன் தன் பரிமாணத்தில் 9அங்குலம் குறைந்துகொண்டு வருகிறது. இப்படி ஒரு மைல் குறைய 20 வருஷஞ்செல்லும். 2, 000 மைல் குறைய 40, 000 வருஷங்கள் சொல்லும். அப்படி 2, 000 மைல் குறைந்தாலும் அப்போதும் அதன் தோற்றத்தில் மாறுதலிராதாம். சூரியனின் குறுக்களவு 860,000 மைல்.

5. Medicine **வைத்தியம்:—**

நாய்க்கடிவிஷநிவிர்த்திப் பால்:—வெறிநாய் கடித்தவர்களுக்கு ஒரு விஷ நிவிர்த்திப்பால் குத்துவதினூல் முக்காலே மூன்று வீசம் குணமாகிறதென்று தெரியவருகிறது. வெறிநாய் கடித்த 1, 000 பேரில் 975 பேர் இப்பால் குத்திக் கொண்டதால் சுகமடைந்தார்கள்.

Special Supplement.

விசேஷ அநுபந்தம்.

வேமன்ன மகாகவி பத்யங்கள்.

[வேமன்ன கவி தெலுங்கர்; அவர் பத்யங்களும் தெலுங்கு. அவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் பிற்குறித்த வெண்பாக்கள் விவேகசிந்தாமணியிற் பிரசுரமாகின்றன. அப்பத்திராதிபர் அனுமதியின்பேரில் பெயர்த்தெடுக்கலாயிற்று.]

சிவத்தைக் கண்டமனம் மற்றேன்றில் தங்காது.

வானமுதம் நன்கு வயிறூர மாந்தியபின்
ஆனமுதத் தாசை யடுக்குமோ—தானதுபோல்
எங்கு நிறைசிவத்தை யின்னருளாற் கண்டமனம்
தங்குறுமோ மற்றொன்றிற் றான்

உருவச் சிறுமையைக்கண்டு அவமதித்தல் ஆகாது.

கண்ணுக்கு மிக்க கறுப்பா யிருக்குமிள
குண்ணச் சுவைநன் குறைத்திடுமோல்—ஒண்ணுதல்சேர்
பெண்ணமுத மன்னாய் பிறங்குமறி விற்பெரியோர்
வண்ணமுமிற் றென்றே மதி.

இதுவுமது.

கத்தூரி நோக்கிற் கறுத்திருப்பினும்வாசம்
எத்திசையும் வீசி யினிதாகும்—முத்தம்
தனையொத்த வெண்ணகையாய் சாற்றுமிது போலாம்
கனமுற்றார் தங்குணமுங் காண்.

சிறியோர் எங்குபோனலும் பெருமையடையார்.

கொங்கணம்போ னாலும்நாய் கோளரியா மோகாசி
அங்கணையப் பன்றிகரி யாகுமோ—நங்காய்வண்
சிந்தைநல னில்லாச் சிறியார்தா மெங்குறினும்
அந்தணரா காரென் றறி.

எவர் யாதுதீங்கு செய்யினும் பொறுத்திருப்பவன்யோகி.

வைதிடினுந் தன்னை வருந்திடினு மாறொன்று
செய்கலனாய்ச் சும்மா இருந்திடுவான்—வையமிசை
ஆனனே தூயபர மான்மா வவன்பெருமை
தானார்க்குச் செப்பத் தரம்,

சஞ்சலமில்லாமையே இன்பம்.

காற்றணையாத் தீபம்போற் கர்ச்சித் தெழுந்திரையின்
தோற்றமில்லாத் தோயக் கடல்போலச்—சாற்றும்
மனத்துளக்கம் நீங்கி வதிவதே யின்பம்
தனக்கிணையில் முத்தியுமாம் தான்.

பழக்கத்தால் எந்தச்செயலும் எளிதாகும்.

ஒன்றியுரை யாடிவர உள்ளத்தன் போங்கிடுமால்
தின்றுவர வேம்பதுவும் தித்திக்கும்—என்றும்
பழகுதலா லெச்செயலும் பாரி லெளிதாகும்
மழைமதர்க்கண் மங்காய் மதி.

செல்வம் மனிதர்க்குக் கேடுதியாகும்.

செல்வம் பெருகப் பெருகும் செழித்தாசை
சொல்லுமனத் தாசையினற் றூர்க்குணமாம்—செல்வமது
குன்றக் குறைந்திடுமோ லாசை குறைந்திடவே
நன்றில்குணம் தானும் கெடும்.

ACKNOWLEDGEMENT OF BOOKS.

புத்தகவரவு.

தமிழ்:—(T. Chelvakesavaroya Mudaliar M. A.)

இரசயண சாஸ்திரம். (முதற்புத்தகம்) (The Madras Literary Bureau)

மதராஸ் லிடரரி பூரோ.

தென்னாட்டுச் சிரேட்டர்கள்.
(இரண்டாவது பாகம்.)

தயாராகிவிட்டது. ஆகஸ்டுமீ முதலில் வெளிப்படும். இதிலே திருமணம் வேதாத்திரீசதாச முதலியார், நவாப்சர் சாலர்ஜங், பூண்டி-அரங்கநாத முதலியார், காஜுலு லக்ஷ்மீ நரசு செட்டியார், சர் குமரபுரம் சேஷாத்திரி ஐயர், இராஜதர்மப் பிரவீணர் T. R. A. தம்பு செட்டியார் இன்னோரன்ன ஜீவிய சரித்திரங்கள் அடங்கி உள்ளன. படங்களும் உண்டு.

விலை அணு 12. வேண்டியவர்கள் செக்ரடரிக்கு எழுதவும்.

புத்திதேர்ச்சிக் குரிய கல்வி.

[அன்னை வசந்தையார் பிரசங்கத்தை மொழிபெயர்த்து எழுதியவை களினின்றும் எடுக்கப்பட்டவை.]

"இந்தியாவின் தற்காலக் கல்வி விவேகத்தோடியைந்ததா யில்லாமற் பிள்ளைகளுடைய மனதில் ஏராளமான பாரத்தைத் திணிக்கிறதாயிருக்கிறது.

"வித்தியா விஷயத்தைப் பார்க்குங்கால் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரும் வைக்கீல்களும் டாக்டர்களுமே மிகுதியாயிருக்கிறார்கள். அவர்களிருக்கக்கூடாதென்று நான் சொல்லவரவில்லை. மிகவும் அதிகமென்று சொல்ல வந்தேன். ஒவ்வொரு நடபடிக்கைகளிலும் வைக்கீல்களே எனக்கு மிகுந்த ஒத்தாசை செய்திருக்கிறார்கள். இவ்வுத்தியோகங்களிற் கூட்டமிகுந்து விட்டது. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் வைக்கீல்களும் டாக்டர்களுமிருக்கவேண்டியது மிகுந்த அவசியமே. எனினும் அவர்கள் இந்தியாவுக்கு ஆஸ்தி சம்பாதிப்பவர்களல்லர். சம்பாதிக்குந் திரவியத்தை உட்கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். பொருள் செய்யும் வியாபார முயற்சிகளில் அவர்கள் பிரவேசிக்கவேண்டும். இவ்வித முயற்சி இந்தியாவில் நின்று கொண்டு வருகிறது. நீங்களொரு இயந்திர சாலையேற்படுத்தினால் அதற்கொரு ஆங்கிலேய மானேஜரைக் கொண்டுவருகிறீர்கள். அவரே பைய்யப்பைய அவ்வியந்திரசாலை அதிபதியாய் விடுகின்றனர். இந்தியாவினுடைய நாகரீக வித்தைகளெல்லாம் மறைந்து விட்டன. கிருஷித்தொழில் எவ்விதம் நடக்க வேண்டுமோ அவ்விதம் இப்பொழுது நடக்கவில்லை. காவேரி நதியின் அருகிலிருந்து மின் சாரசக்தியை உண்டாக்க வேணுமென்று மைசூர் மகாராஜா வெண்ணிய காலத்தில் ஆங்கிலேய இஞ்சீனியரைக் கூப்பிடவேண்டியதாயிற்று. அது அவர்குற்றமோ? அன்று. இந்தியரில் இஞ்சீனியர்கிடைக்காதகுற்றமே. கரும்பொன், செம்பொன், ஈயம் முதலிய லோகங்கள் விளைந்திருக்கிறதாகத் தெரிந்தால் அந்நிலங்களை அந்நிய தேசத்தாருக்கு அடைத்து விடுகிறார்கள். இங்கிலாந்தினுடைய பணத்தை இந்தியாவில் முதலாகப்போட்டு அதின் வருவாயை இங்கிலாந்திற்குக் கொண்டுபோய்விட இந்தியர்கள் தங்களுடைய காலக்ஷேபத்திற்கே திண்டாடுகிறார்கள். இவ்வித முயற்சியில் நீங்களும் தேர்ச்சியடைந்தால் உங்களுடைய தேசத்தை நீங்கள் முன்னிலைக்குக் கொண்டு வரக்கூடும்.

"உங்களில் முக்கிய குறை என்னெனில் பொது நன்மை விஷயத்தில் ஊக்கம் குன்றியிருப்பதே. ஒருவனுக்கு ஒரு கெடுதி செய்யப்பட்டால் மற்ற

வர் நமக்கென்ன வென்கிருர்கள். ஒரு ஏழைக்கு ஒரு தீங்கு நேரிட்டால் ஒவ்வொருவரும் அத்தீங்கு தனக்கு நேரிட்டதாகவே நினைக்கவேண்டும். இஃதன்றித் தேசமில்லை. சில வேளைகளில் ஒவ்வொரு ராஜதானியா மாத்திரம் தங்களில் ஒற்றுமை யுணர்ச்சியைக் காட்டுகிருர்கள். தன்னை இந்தியனென்று எவனும் சொல்ல நான் கேள்விப்பட்டதே இல்லை. சென்னையான் வங்காளத்தான் என்று சொல்லுகிருனே அன்றி **இந்தியன்** என்று பொது வாய்ச் சொல்லக்காணேன். ஒற்றுமைக் கிடமில்லாதபடி இந்தியா அநேக பாகங்களாகப்'' பிளவுபட்டிருக்கிறது.''—**அறிவு விளக்கம்.**

பகாப் பொருள்கள்.

பயிருணவு-டீடிகா விஷயங்களைக்குறித்து **Mr. C. K. சுப்பராயர் வியவசாய தீபிகையில்** எழுதுகிறவர் பகாப் பொருள்களை இன்னவையென்று பின்வருமாறு விளக்குகின்ருர்.

''இந்த ஜகத்திலுள்ள பொருள்கள் **பகுபொருள்கள்** என்றும் **பகாப் பொருள்கள்** அல்லது மூலப்பொருள்கள் என்றும் இருவகைப்படும். இரும்பும் கந்தகமும் பகாப்பொருள்களில் சேர்ந்தவை. இரும்பையாவது கந்தகத்தையாவது இரண்டு அல்லது அதிகமான வெவ்வேறு விதமான வஸ்துக்களாய் எவ்விதத்திலும் பிரிக்க எவர்களாலும் முடியாது. ஒரு இரும்புத் துண்டைக் கொல்லன் உலையில் சிவக்கக் காய்ச்சி அதின் பேரில் கந்தகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக வைத்துக்கொண்டு வந்தால் இரண்டு வஸ்துக்களும் உருகி ஐக்கியப்பட்டு வேறு லக்ஷணங்களையுடைய கருநிறமுள்ள ஒரு வஸ்துவாகும். அந்த வஸ்து பகுபொருள் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் என்னவெனில், அதை ரசாயனசாஸ்திரிகள் இரும்பாகவும் கந்தகமாகவும் பிரித்துக் காட்டுவார்கள். இரும்பையாகிலும் கந்தகத்தையாகிலும் வேறு பொருள்களாய்ப்பிரிக்க இதுவரையிலும் ரசாயன சாஸ்திரிகளால் முடியாமையால் அவைகள் மூலப்பொருள்களென்று பாவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இனிமேல் எந்த ரசாயன சாஸ்திரியும் அவைகள் ஒவ்வொன்றையும் வெவ்வேறு பொருள்களாகப் பிரிக்க வொண்ணுதென்று திடமாய் சொல்வதற்கில்லை. ஹிந்து தத்துவ சாஸ்திரப்படிக்கு ஒரே மூலப்பிரகிருதியினின்று பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களும் உண்டாயின வென்பது ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியால் இனிமேல் எற்பட்டாலும் எற்படலாம். ஆனல் உலகத்திலுள்ள மூலப் பொருள்கள் அறுபத்தியேழு என்று இது வரையில் தீர்மானமாயிருக்கிறது. இந்த 67-மூலப் பொருள்களில் இரண்டு மூன்று அல்லது அதிகமானவை ஒன்றோடொன்று பல அளவாய் ஐக்கியப்படுவதால் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எண்ணிறந்த பொருள்கள் உண்டாகின்றன. பொன், வெள்ளி, இரும்பு, காரீயம், வெள்ளீயம், துத்தநாகம், பாதரசம், கரி, கந்தகம், ஆகிய

இவ்வஸ்துக்கள் யாவரும் அறிந்த பகாப்பொருள்கள். சாதாரணமாக யாவருக்கும் தெரியாத பகாப்பொருள்களைப்பற்றி இனிச் சொல்லப்போகிறேன்.

"நெருப்புக்குச்சியின் நுனியில் கந்தகத்தோடு கலந்து ஒரு வஸ்து அமைக்கப்பட் டிருக்கிறது. அதற்குப் பாஸ்கரம் (Phosphorus) என்று பெயர். இருட்டில் நெருப்புக் குச்சியைச் சுவர்மேல் மெதுவாய்க் கிறினல் பளபளவென்று மின்னல்போல் வெளிச்சம் உண்டாவதும் எக்காலத்திலும் குச்சியைப் பலமாய்க் கிறினல் அது உடனே நெருப்புப் பற்றிக்கொள்வதும் பாஸ்கரம் என்னும் வஸ்துவின் குணவிசேஷம். அது பகாப்பொருள். நிக்கெல் (Nickel) என்றும் வெள்ளைச்செம்பு என்றும் பல பெயர்களால் வழங்கும் உலோகமும் பகாப்பொருளே. தீபாவளிப் பண்டிகை காலத்தில் ஒரு கோலின் நுனியில் துத்த நாகத்தைப்போன்ற தகட்டுத்துண்டைச் சொருகி சென்னப்பட்டணம் முதலான இடங்களில் விற்கிறார்கள். அந்தத் தகட்டை விளக்கில் கொளுத்தினல் மத்தாப்பைப்போல் எரிந்து சுண்ணாம்பு நீற்றைப் போன்ற பொடியாய் உதிருகிறது. அந்தப் பொடியை மஞ்சளுடன் கலந்தால் சிவப்பான அட்சதையாகிறது. அந்த உலோகத்திற்கு மெக்னிஷியம் (Magnesium) என்று இங்கிலீஷில் பெயர். மெக்னிஷ்யம் தகட்டைச் சிறிது காலம் காற்றுக்கு வெளியிட்டு வைத்திருந்தாலும் சுண்ணாம்பு நீற்றைப் போன்ற சூரணமாகிவிடும். இந்தச் சூரணத்திலிருக்கும் பிராணவாயு (Oxygen) என்ற ஒருவிதக்காற்றை ரசாயன சாஸ்திரிகள் நீக்கிவிடில் மெக்னீஷியம் என்ற பகாப்பொருள் மிஞ்சும். புதுச்சுண்ணாம்பு நீற்றிலும மேற்கூறியபிராணவாயு உண்டு. அதை ரசாயனசாஸ்திரிகளால் நீக்கிவிடக்கூடும். அப்படி நீக்கினல் பொன்போன்ற மஞ்சள் நிறமான ஒரு உலோகம் மிஞ்சும். அது தான் சுண்ணாம்புக்கு மூலமாகிய ஒரு பகாப்பொருள். அதற்கு கால்ஷியம் (Calcium) என்று பெயர். இரும்பைச் சில்காலம் காற்றுக்குவெளியில் போட்டிருந்தால் அது துருப்பிடித்துச் சிவந்தபொடியாவது யாவருக்கும் தெரியும். இரும்பு பிராணவாயுவோடு ஐக்கியப்பட்டு அயச்செந்தூரமாகிறது. (Oxide of iron). அதினின்று பிராணவாயுவை நீக்கினல் இரும்பாகிறது. இந்தப் பூலோகத்தில் சூழ்ந்திருக்கிற வாயுமண்டலத்தில் முக்கியமாய் இரண்டுவிதப் பகாப்பொருள்களான வாயுக்கள் ஒன்றோடொன்று ஐக்கியப்படாமல் கலந்திருக்கின்றன. அவைகளின் ஒன்று பிராணவாயு. இங்கிலீஷில் அதற்கு ஆக்விஜன் (Oxygen) என்று பெயர். இந்த வாயுவை சகல ஜீவராசிகளும் உஸ்வாசம்செய்து பிழைக்கின்றன. சிறிது நேரமாகிலும் இந்த வாயு இல்லாமற் போனல் பிராணிதிட்டு முட்டடைந்து மாண்டுவிடும். ஒன்றும் எரியாது. இந்தவாயு இல்லாமையினல் தான் ஜலத்தில் மூழ்கினவர்கள் இறந்து போகிறார்கள். இந்தவாயு பிராணிகளின் உறுப்புகளோடும் செடிகளின் உறிப்புகளோடும் நிதானமாய் ஐக்கியப் படுவதற்கு மட்குதல் என்று பெயர் வழங்குகிறது. மட்குதல் ஒன்பது நிதானமான தகனமேதான். ஸ்தாவர ஜீவவர்க்கப் பொருள்களுடன் வெகு தீவிரமாய் பிராணவாயு ஐக்கியப்படுவதற்கு தகனம் என்று பெயர்."

Works by T. Ramakrishna.

'Padmini.'—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, D.C. L., M. P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

'Tales of Ind' and other Poems—Rs. 2-8.

Copies can be had from The Secretary—*'Madras Literary Bureau.'*

"THE TAMILS 1800 YEARS AGO."

Rs. Five (5) only. Postage Extra.

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter of Tamil poets and their poems displays the erudition of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* (leader of the 13th May 1904.)

2. "For a book of the kind the materials must be collected from various sources, and when they are collected they have to be so arranged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in this publication relates to as far back a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanakasabhai observes that the Sanskrit Literatute is strongly poor, while a considerable portion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age. * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' 8, Umpherson Street, Black Town, Madras.

TAMIL BOOKS.

1. 'தென்னாட்டுச் சிரேட்டர்கள்' (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப் பட்டுள்ளன, விலை அணா 12.

2. 'பன்னிருபெண்மணிகள்':—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோரவர் இதிலே பலவகைப் பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெண்பாலார்க்கு மேனாட்டுமாதர்சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொருமாதும் கையில் எற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இது தான். விலை அணா 6.

3. 'விக்டோரியா மெய்க்கீர்த்தி':—விக்டோரியா மகாராணியார் மீது பாடப் பட்ட புகழ்மாலை இது. இதிலே அரியபெரிய செய்திகள் பலஅடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால்அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்ல வசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய்ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடாரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

IN THE PRESS.

Will be Ready Immediately.

A PRIMER OF

'TAMIL LITERATURE.'

The first attempt of its kind. It is a critical and historical Survey of Tamil Literature up to date. Price per copy Re. 1. To early Subscribers As. 12 only. Please register your name at the 'Madras Literary Bureau,' Madras.

அச்சிலிருக்கின்றது.

லலிதா ஸஹஸ்ர நாமம்.

இது பாஸ்கரராயர் மகாபாஷிய சங்கிரகத்தோடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறி வருகின்றது. இது தேவி ஸ்தோத்திரம் ஆதலால் இதிலே தேவியின் ஓராயிர நாமங்களையும் பாஸ்கரராயர் பாஷியத்தோடு தமிழர் படித்து, யோக இரகசியத்தையும், புராணகதைகளையும், மந்திர சாஸ்திரபாகங்களையும், மோக்ஷ வழிகளையும் நன்கு அறியலாம். இதன் விலை ரூ 2—0—0. இப்பொழுது பெயரைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு ரூ 1—8—0. உடனே மதராஸிலிருக்கும் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

NEW BOOKS.

புத்தம் புதிய புத்தகங்கள்.

இரசாயண சாஸ்திரம்.

(முதற்புத்தகம்)

விலை அணா ஆறு.

இது புத்தகத்திலே இராசாயண சாஸ்திரநுட்பங்களைப் பற்பல அழகிய படங்களோடு நன்கு விளக்கக்காட்டி இருக்கின்றது. நல்ல பளபளப்பான உயர்ந்த கடிதத்திலே நலமாக அச்சேறியுள்ள புத்தகம். சிறுவர், சிறுமியர், ஆகிய சகலருக்கும் பயன்படக் கூடியது.

சத்திய விஜயம்.

இது அரிச்சந்திரன் திவ்விய சரித்திரம். நற்றமிழ் இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சத்தியமே மாந்தர்க்கு உயர்ந்த விரதமென்பதை விளக்கிக்காட்டு மொப்பற்ற திருமுறை இதுதான். விலை அணா ௪.

வேண்டுவோர் உடனுக்குடனே எழுதவும். வி. பி. யில் அனுப்பப்படும். தபாற்கூலி வேறு.

செக்ரடரி

மதராவ்ஸ் லிடரரிபூரோ,

8, அம்பர்சன்வீதி, மதராஸ்.